# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 5 இதழ் : 6 செப்டம்பர் 2026



SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

# உங்கள் கனவு இல்லம்
# இனி ஒரு கனவு இல்லை.

## இன்றே சேமிக்க துவங்குவோம்!!!

SREE VISALAM CHIT FUND LTD
SVCF
ESTD 1947
79th YEAR






1 இலட்சம் சீட்டு
முதல்
கோடி சீட்டு
வரை....

ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

80
Celebrating
YEARS OF EXCELLENCE
SINCE 1947

நம்பிக்கை, நாணயம், நேர்மை
நிலையான தன்மையுடன், வாடிக்கையாளர் சேவையில்...

எங்களை, ஊக்குவிக்கும் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் நன்றி

+91 8667003356 | 04565 283 477
WWW.SREEVISALAM.COM

SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

https://www.sreevisalam.com/
போன்: 86670 03356



# நாம் நகரத்தார்


சமூக இணையதள மின்னிதழ்

**செப்டம்பர் 2026**

மலர் : 5  இதழ் : 6

இலவச வெளியீடு

**பதிப்பாசிரியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.

---

**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534

---


கட்டுரைகள் மற்றும் இதர

படைப்புகளுக்கு

படைப்பாளர்களே பொறுப்பு.

விளம்பரங்கள் விளம்பரதாரரின்

பொறுப்பில் வெளியாகின்றன.

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு...

வணக்கம்....!

நமது மின்னிதழின் 49வது இதழ் இது. நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாகத் தொடர்ந்து பயணித்து வரும் நமது மின்னிதழுக்கு ஆதரவும், அன்பும், ஊக்கமும் வழங்கி வரும் அனைத்து வாசகர்களுக்கும் முதற்கண் எங்களது பணிவான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்னும் சில தினங்களில் விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படவிருக்கிறது. நம் வாழ்வில் எந்த ஒரு நல்ல காரியத்தையும் தொடங்கும்போதும் முதலில் விநாயகரை நினைத்து வணங்குவது நமது மரபாகும். தடைகளை நீக்கி, நல்ல தொடக்கத்தையும் தெளிந்த சிந்தனையையும் அருளும் விநாயகப் பெருமானை போற்றும் இந்த நன்னாளில், அவரது பெருமையையும் நம் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள அவரது வழிபாட்டு மரபையும் நினைவுகூர்வோம்.

இந்துக்களின் தெய்வ வழிபாடுகளில், எந்த ஒரு சுப காரியத்தைத் தொடங்கினாலும் விநாயகர் வழிபாட்டிற்கே முதலிடம் அளிக்கப்படுகிறது. தமிழகத்தில் மட்டுமின்றி, உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் இந்து மக்களின் வழிபாட்டு மரபிலும் விநாயகர் வழிபாடு முக்கிய இடம் பெற்றுள்ளது.

விநாயகர் என்பது தடைகளை நீக்குபவர் என்ற நம்பிக்கையைத் தாண்டி, அறிவு, தெளிவு, நல்ல தொடக்கம், நம்பிக்கை, பணிவு ஆகியவற்றின் அடையாளமாகவும் நம் மனங்களில் நிலைத்திருக்கிறார். அதனால்தான் ஒரு புதிய முயற்சியைத் தொடங்கும்போதும், ஒரு சுபகாரியத்தை மேற்கொள்ளும்போதும் முதலில் விநாயகரை நினைத்து வணங்குகிறோம்.

விநாயகர் சதுர்த்தி என்பது விநாயகரை வழிபடும் முக்கியமான விழாவாகும். தமிழ் மாதமான ஆவணியில், வளர்பிறை சதுர்த்தி நாளில் இவ்விழா கொண்டாடப்படுகிறது. நம் தமிழகத்தில் மட்டுமின்றி, இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும், உலகின் பல நாடுகளில் வாழும் தமிழர்கள் மற்றும் இந்து மக்களாலும் இவ்விழா பக்தியுடனும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்படுகிறது.

நம் இல்லங்களில் எளிமையாக மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து வழிபடுவது முதல், ஆலயங்களில் சிறப்பு பூஜைகள் செய்வது வரை விநாயகர் வழிபாடு பல்வேறு வடிவங்களில் நம் வாழ்வோடு ஒன்றிணைந்துள்ளது. அருகம்புல், கொழுக்கட்டை, சுண்டல், பொரி, பழங்கள் போன்ற எளிய நைவேத்தியங்களுடன் விநாயகரை வழிபடுவது நமது பாரம்பரியத்தின் எளிமையையும் அழகையும் எடுத்துக்காட்டுகிறது.

குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து பூஜை செய்வதும், குழந்தைகளுக்கு நமது வழிபாட்டு முறைகளையும் பண்பாட்டு மரபுகளையும் அறிமுகப்படுத்துவதும் இவ்விழாவின் அழகான அம்சங்களாகும். இவ்வாறு தலைமுறை தலைமுறையாகத் தொடரும் மரபுகளே நமது பண்பாட்டின் அடையாளங்களாகத் திகழ்கின்றன.

வாழ்க்கையில் எத்தனை புதிய முயற்சிகளை மேற்கொண்டாலும், அவற்றின் தொடக்கத்தில் நம்பிக்கையும் நல்ல எண்ணமும் இருக்க வேண்டும். அந்த நல்ல எண்ணத்துடன் விநாயகரை வணங்கி, தடைகள் வந்தாலும் தளராமல், தெளிவான சிந்தனையுடன் தொடர்ந்து முயற்சி செய்வோம்.

"எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டும்" என்ற நம்பிக்கையுடன் விநாயகரை வணங்கும் போது, நம்முடைய முயற்சியிலும் ஒரு புதிய நம்பிக்கை பிறக்கிறது. அந்த நம்பிக்கையே நம்மை முன்னோக்கி அழைத்துச் செல்லும் சக்தியாக அமையட்டும்.

இந்த விநாயகர் சதுர்த்தி நன்னாளில், தும்பிக்கையானை நம்பிக்கையுடன் வழிபட்டு, அவரது அருளையும் ஆசியையும் பெற்று, நமது குடும்பங்களும், உறவுகளும், சமூகமும் வளமும் நலமும் பெற்று சிறக்க வேண்டுவோம்.

கேட்டதையெல்லாம் கேட்டபடியே அருளும் விநாயகப் பெருமானின் அருளால், நம் வாழ்வில் நல்ல தொடக்கங்களும், நல்ல எண்ணங்களும், நல்ல செயல்களும் பெருகட்டும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில்
இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது
மின்னிதழை மாதம் தோறும் பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram


PALLATHUR MOTORS LLP
SWITCH TO THE FUTURE
PETROL
RIDER LIFE
SALARY வந்தா உடனே ,
பெட்ரோல் - க்கு
ஒரு 2000 to 4000 தனியா
வைக்கணும் !
ELECTRIC
RIDER LIFE
SALARY வந்தா உடனே,
Extra 2000 to 4000
Saving - ல கோல்டு
வாங்கலாமா இல்ல,
சீட்டு போடலாமானு
யோசிக்கலாம்...!
PETROL STATION
ELECTRIFY YOUR
JOURNEY NOW
Go far and wide with just
a single charge
LECTRIX
Book Your
TEST DR!VE
Now!!
மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735
பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

நகரத்தார் வாசிப்பின் ஓர் அங்கமாக மாதந்தோறும்
நாம் நகரத்தார் மின்னிதழ் உலகளவில் வெளிவருகிறது.
பெரும்பான்மை நகரத்தார்களை சமூக இணையதள
ஊடகங்களின் வழி எளிதில் சென்றடையும்
நமது மின்னிதழில் தங்கள் நிறுவனம் மற்றும் தங்கள்
சார்ந்த விளம்பரங்கள் இடம்பெற்றால் உலகளாவிய
நகரத்தார்களை எளிதில் சென்றடையும் .

நமது இதழில் விளம்பரம் செய்ய

**ஒரு பக்க விளம்பரத்திற்கான**
**கட்டணம்- ருபாய்: ₹350/- மட்டுமே**

**ஓர் ஆண்டிற்கான (12 இதழ்கள்) விளம்பரத்திற்கான**
**கட்டணம் – ருபயம்: ₹4000/- மட்டும**

குறைந்த செலவில் தங்களது விளம்பரங்களை
நமது மின்னிதழில் வெளியிட்டுப் பயன் பெறுங்கள்.

**குறைந்த செலவில் விளம்பரப்படுத்துங்கள்.**

**9659032994**

**naamnagarathar@outlook.com**

## இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- தோல்வியை ருசியுங்கள்! வெற்றியை ரசியுங்கள்!
  –கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா. .......................... 13

**ஆன்மீகம்**

- விநாயகப் பெருமானின் திருமேனி சொல்லும் வாழ்வியல் ரகசியங்கள்
  –உமாராணி சொக்கலிங்கம், நற்சாந்துபட்டி .......................... 19

**பண்பாடு**

- நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள் – முனைவர் நா.வள்ளி சொக்கலிங்கம்.... 29

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA .......... 35

**கவிச்சோலை**

- மடியேந்தும் தாய் அல்லவா..! –கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி. ...... 36
- முயற்சியே புதுப்பாதை.. –அரு.சிவகாமி இராமனாதன், ஒக்கூர்–நவிமும்பை. ... 59

**சுயமுன்னேற்றம்**

- வெற்றிப்பாதை.. தொடர்.. இராம.சொக்கலிங்கம். .......................... 37

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி............. 48

**சமையல்**

- சத்தும் சுவையும் தரும் வரகரிசி கஞ்சி .......................... 56

**நிதி மேலாண்மை**

- பங்கு சந்தை .......................... 60

**ஜோதிடம்**

- ஜாதகத்தில் மறைந்திருக்கும் பூர்வ புண்ணிய ரகசியம் –ஜோதிடர் எல்லி .... 85




GET IT ON
Google Play

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக

நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...

இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்

உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## வளத்திஸ்ரீ சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

VALATHI 2005

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

**எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு**

**ரூ. 1,00,000/- முதல்**

**ரூ. 30,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை

பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

0431-2760064
0431-7968005

துவக்கம் 2005

94439 86143

**TRICHY SHREE VALATHI CHITFUNDS (P) LTD.**

**VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,**

**SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,**

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6–வது கிராஸ் – கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1),அருணோதயா அபார்ட்மென்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029

எண். 1, முதல் தளம், பழைய சொக்கநாதர் கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001. Cell : 89034 90064.

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ வாய்மையே வெல்லும் ★

# ஓர் வேண்டுகோள்

## விளம்பரம் அல்லது நன்கொடை கொடுத்து உதவுங்கள்

**வாசகர்கள் அன்பான கவனத்திற்கு**

கடந்த மூன்று ஆண்டுகளாக நமது மின்னிதழ் உலகளாவிய நகரத்தார் பெருமக்களுக்கு இலவச இதழாக சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் – மொபைல் செயலி (Mobile App) மூலமாகவும் மாதம் தோறும் வழங்கப்பட்டு வருகிறது. மின்னிதழை அனைவரும் தங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு பகிர்கிறார்கள்.

நகரத்தாரின் பண்பாட்டினை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணமும், நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்திலும் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.

**இதழின் வளர்ச்சியில் தாங்களும் பங்கேற்கும் வகையில் விளம்பரங்களும், நன்கொடைகளையும் அளித்து உதவுங்கள்.**

**அலைபேசி எண்ணில் G Pay செய்ய:**

**97917 76534**

**UPI Pin: senaadigital@okicici**

இதழில் விளம்பரம் செய்ய
கீழ்கண்ட எண்ணில் அழைக்கவும்.

**96590 32994**

# தோல்வியை ருசியுங்கள்! வெற்றியை ரசியுங்கள்!





– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

மனிதர்கள் தோல்வியைக் கண்டு அஞ்சுவது இயல்பு. தோல்வி நம்மை நெருங்கக்கூடாது என்று நினைத்து, அதைத் துரத்திக் கொண்டே இருப்போம். ஆனால், தோல்வியைக் கண்டு அஞ்சவும் வேண்டாம்; அதைத் துரத்தவும் வேண்டாம். நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று – தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ளப் பழக வேண்டும்!

நீங்கள் எந்த அளவுக்குத் தோல்வியிலிருந்து பாடம் கற்றுக் கொள்கிறீர்களோ, அந்த அளவுக்கு உங்கள் வாழ்க்கை ஒரு படிக்கத்தக்க புத்தகமாக மாறும்.

புகழ்பெற்ற எழுத்தாளர் பெஞ்சமின் ஃப்ராங்க்ளின் புகழின் உச்சியை எளிதாகத் தொட்டவர் அல்ல. எழுத்துலகில் வெற்றி பெறுவதற்கு முன் அவர் பல வலிகளையும், தொடர் தோல்விகளையும் சந்தித்தவர். அந்தத் தோல்விகளை அவர் எப்படி வெற்றிக்கான படிகளாக மாற்றினார் என்பதைப் பார்ப்போம்.




பெஞ்சமின் ஃப்ராங்க்ளினின் தந்தைக்கு இரண்டு மனைவிகள். மொத்தம் 17 குழந்தைகள். குடும்பச் சூழ்நிலை காரணமாக பெஞ்சமின் எட்டு வயதில் தான் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

படிப்பில் கணிதம் அவருக்குக் கடினமாக இருந்தது.

பின்னர், குடும்பச் சூழ்நிலையால் 12 வயதிலேயே படிப்பை நிறுத்திவிட்டு, தனது அண்ணன் நடத்தி வந்த அச்சகத்தில் வேலைக்குச் சேர்ந்தார்.



பள்ளிப்படிப்பு பாதியில் நின்றாலும், கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அவரிடம் குறையவில்லை. அச்சகத்தில் கிடைத்த அச்சிட்ட தாள்களில் உள்ள எழுத்துக்களைக் கூட விடாமல் வாசிக்கத் தொடங்கினார். அந்த வாசிப்புப் பழக்கமே பின்னாளில் அவரது அறிவு வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது.

அவர் அடிக்கடி துறைமுகத்திற்குச் சென்று கப்பல்களைப் பார்த்து ரசிப்பார். கப்பலிலிருந்து இறங்கும் பயணிகள், மாலுமிகளிடம் அவர்கள் படித்து முடித்த புத்தகங்களைக் கேட்டுப் பெற்று வாசிப்பார். புரியாத விஷயங்களாக இருந்தாலும், விடாமுயற்சியுடன் இறுதிவரை படிப்பார்.

அந்தக் காலத்தில் பாஸ்டன் நகரிலிருந்து இரண்டு நாளிதழ்கள் மட்டுமே அவர்களின் ஊருக்கு வந்தன. அவையும் விரைவில் விற்றுத் தீர்ந்துவிடும். இதனால், உள்ளூர் செய்திகளை வெளியிடும் நாளிதழ் ஒன்றை நடத்த வேண்டும் என்ற எண்ணம் அவரது அண்ணனுக்கு ஏற்பட்டது.

அதைப் பார்த்த பெஞ்சமினுக்கும் அந்தப் பத்திரிகையில் எழுத வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. ஆனால், படிப்பை பாதியில் நிறுத்தியிருந்ததால், அவரது அண்ணன் அவரை ஒரு "முட்டாள்" என்றே நினைத்தார். அருகில் வரக்கூட அனுமதிக்காமல் விரட்டினார்.



ஆனால் பெஞ்சமினின் எழுத்து ஆர்வம் குறையவில்லை.

புனைப் பெயரில் சில கட்டுரைகளை எழுதி, அவற்றை அண்ணனின் அச்சகக் கதவின் ஓரத்தில் வைத்துவிட்டு செல்வார். ஆரம்பத்தில் அவற்றைக் கோபத்துடன் பார்த்த அண்ணன், ஒருநாள் அந்தக் கட்டுரையைப் படித்தபோது அது நன்றாக இருப்பதை உணர்ந்து தனது நாளிதழில் வெளியிட்டார்.

கட்டுரைகளுக்கு வாசகர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. பல மாதங்களுக்குப் பிறகுதான் அந்தக் கட்டுரைகளை எழுதியது தனது தம்பி பெஞ்சமின்தான் என்பது அண்ணனுக்குத் தெரியவந்தது.

அண்ணன் பாராட்டுவார் என்று எதிர்பார்த்த பெஞ்சமினுக்கு, பாராட்டுக்குப் பதிலாகத் திட்டும் அடியும் கிடைத்தது.

அந்தச் சூழ்நிலையில் வீட்டை விட்டு வெளியேறிய பெஞ்சமின், தனது வாழ்க்கையைத் தானே அமைத்துக்கொள்ள முடிவு செய்தார். பிலடெல்பியா நகருக்குச் சென்ற அவர், இதுவரை சந்தித்த தோல்விகளிலிருந்து கிடைத்த அனுபவங்களைச் சிந்தித்தார்.

"வெற்றி பெற என்னென்ன குணங்கள் வேண்டும்?"

என்று தனக்குத்தானே கேட்டு, அதற்கேற்ப தனது வாழ்க்கையை அமைத்துக்கொண்டார்.



தேவைப்படும்போது மட்டுமே பேசுதல், தேவைக்கு மட்டுமே உணவருந்துதல், ஒழுங்காகச் செயல்படுதல், சிக்கனமாக வாழ்தல், பதற்றமின்றிச் செயல்படுதல், ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல், அடக்கமாக வாழ்தல் போன்ற பல நல்ல குணங்களைத் தனது வாழ்க்கையில் கடைப்பிடித்தார்.

அச்சகத் தொழிலில் ஈடுபட்டு, பல புதுமைகளை அறிமுகப்படுத்தி வெற்றி பெற்றார். பின்னர் எழுத்து, வணிகம், அறிவியல், அரசியல் எனப் பல துறைகளில் தனது திறமையை வெளிப்படுத்தினார்.

Poor Richard's Almanack போன்ற நூல்கள் மூலம் புகழும் செல்வமும் பெற்றார். மின்சாரம், இடி, மின்னல் தொடர்பான ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டு, இடி தாங்கி உள்ளிட்ட பல கருவிகளைக் கண்டுபிடித்தார்.

தனக்குக் கிடைத்த செல்வத்தைத் தனக்காக மட்டுமே வைத்துக் கொள்ளாமல், மருத்துவமனை, கல்வி நிறுவனம் உள்ளிட்ட பல சமூகப் பணிகளுக்கும் பயன்படுத்தினார்.

அமெரிக்காவின் விடுதலைப் போராட்டத்திலும் முக்கியப் பங்கு வகித்தார். பின்னாளில் அமெரிக்காவை உருவாக்கிய தலைவர்களுள் ஒருவராக உயர்ந்தார்.

ஒரு காலத்தில் பள்ளிப்படிப்பை முழுமையாக முடிக்க முடியாத சிறுவன்...

பிறர் கையில் கிடைத்த புத்தகங்களைக் கேட்டுப் பெற்றுப் படித்த சிறுவன்...

தன் எழுத்தை யாரும் ஏற்றுக்கொள்ளாத சூழ்நிலையிலும் எழுதுவதை விடாத இளைஞன்...

பின்னாளில் எழுத்தாளர், அறிவியலாளர், கண்டுபிடிப்பாளர், அரசியல் தலைவர் எனப் பல பரிமாணங்களில் சாதித்தார்.

பெஞ்சமின் ஃப்ராங்க்ளினின் வாழ்க்கை நமக்குச் சொல்லும் செய்தி ஒன்றுதான் – தோல்வி என்பது முடிவு அல்ல; அது நம்மை மாற்றிக் கொள்ளக் கிடைக்கும் ஒரு வாய்ப்பு.

தோல்விகள் பலவற்றைச் சந்தித்தாலும், அவற்றிலிருந்து பாடம் கற்று, தன்னைத் தானே செதுக்கிக் கொண்டு வெற்றியை நிலைநாட்டினார் பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்.

எனவே நண்பர்களே...

தோல்வி வந்தால் துவண்டு விடாதீர்கள்.
அதை ருசித்துப் பாருங்கள்.
அதில் இருக்கும் பாடத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்.
அந்தப் பாடமே ஒருநாள் உங்கள் வெற்றியின் சுவையாக மாறும்!

தோல்வியை ருசியுங்கள்...
வெற்றியை ரசியுங்கள்!

இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன் நண்பர்களே!

கருத்துப் பகிர்வுக்கும், தொடர்பிற்கும்
9791033913,
aamchennai@gmail.com

ஸ்ரீ நித்யகல்யாணி
சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

1983-2026 44TH ANNIVERSARY

Our Culture is Financial Discipline.
Money is Easier when your
Proactive Plan with
Nithyakalyani Chit Funds...




OUR BRANCHES

| | |
|---|---|
| Madurai Main 98430 93250 | Arasaradi / Mdu 73391 25777 |
| Dindigul 98432 91652 | Erode 75581 99888 |
| AnnaNagar / Mdu 98432 91653 | Aruppukkottai 73589 91777 |
| Trichy 98432 91654 | Thirunagar / Mdu 84899 10191 |
| Reserveline / Mdu 98430 93256 | Srivilliputhur 70944 61192 |
| Coimbatore 82200 52338 | Pollachi 70923 00882 |

Call : 0452-2692680, 9786300304 / E.Mail : sncfco@gmail.com

# விநாயகரின் திருமேனி சொல்லும் வாழ்வியல் ரகசியங்கள்



விநாயகர் என்றாலே நம் நினைவுக்கு வருவது அவருடைய அழகான புன்னகையும், பெரிய காதுகளும், யானை முகமும், தும்பிக்கையும்,கையில் இருக்கும் மோதகமும் தான்.  குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் மிகவும் பிடித்தமான தெய்வத் திருவுருவம் விநாயகர்.

ஒரு சிறிய குழந்தையிடம், "விநாயகர் எப்படி இருப்பார்?" என்று கேட்டால் கூட, அது உடனே அவருடைய தும்பிக்கையைப் போல கையை வளைத்து காட்டிவிடும். அந்த அளவுக்கு விநாயகர் நம் மனங்களோடு கலந்து நிற்கிறார்.

ஆனால், விநாயகரின் திருமேனியை நாம் பக்தியோடு வணங்குவதோடு மட்டும் நின்றுவிடாமல், அவர் நமக்கு உணர்த்தும் வாழ்க்கைப் பாடங்களையும் சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா?

அவரது உருவத்தில் ஒவ்வொரு உறுப்பும் ஒரு செய்தியைச் சொல்வதாக நம் மரபில் பொருள் கொள்ளப்படுகிறது. அவற்றை வாழ்க்கையோடு இணைத்துப் பார்த்தால்,நாம் தினமும் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளுக்கு எளிய வழிகாட்டுதல்கள் கிடைக்கின்றன.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு எப்போதும் பெரிய பெரிய அறிவுரைகள் தேவையில்லை. சில நேரங்களில் நம்மைச் சுற்றியிருக்கும் ஒரு சிறிய விஷயத்திலிருந்தே மிகப் பெரிய பாடத்தை கற்றுக்கொள்ள முடியும். அந்த வகையில், நம் வீட்டு பூஜையறையில் அமைதியாக அமர்ந்திருக்கும் விநாயகரே நமக்கு ஒரு முழுமையான வாழ்க்கைப் பாடமாகத் தெரிகிறார்.



விநாயகரின் பெரிய தலை, முதலில் நமக்கு நினைவூட்டுவது சிந்தனையின் பரப்பை. ஒரு விஷயம் நமக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக அது தவறு என்று முடிவு செய்துவிடக் கூடாது. நம்முடைய பார்வையைச் சற்று விரிவுபடுத்திப் பார்க்க வேண்டும். வாழ்க்கையில் ஒரே ஒரு வழி மட்டுமே இருக்கிறது என்று நினைப்பவர்களுக்கு, ஒரு சிறிய தடையே பெரிய பிரச்சினையாகத் தெரியும். ஆனால் பல வழிகளைப் பற்றி சிந்திக்கக் கற்றுக் கொண்டவர்களுக்கு, அதே பிரச்சினை ஒரு புதிய வாய்ப்பாக மாறிவிடும்.

நாம் எத்தனை வயதானாலும் கற்றுக்கொள்வதை நிறுத்திவிடக் கூடாது. புதிய விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும். நம்மை விட இளையவர்கள் சொல்லும் கருத்துகளையும் கேட்க வேண்டும்.

நம்மைவிட அனுபவம் வாய்ந்தவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். அறிவு என்பது வயதோடு மட்டும் வருவதில்லை; தொடர்ந்து கற்றுக்கொள்ளும் மனதில்தான் அது வளர்கிறது.



விநாயகரின் பெரிய காதுகள் நமக்கு இன்னொரு முக்கியமான பாடத்தைச் சொல்கின்றன. கேட்பது என்பது ஒரு பெரிய கலை.

நாம் பேசுவதற்கு அதிக நேரம் செலவிடுகிறோம். ஆனால் மற்றவர்கள் பேசுவதைப் பொறுமையாகக் கேட்பதற்கு எவ்வளவு நேரம் செலவிடுகிறோம்?

குடும்பத்தில் கணவன் மனைவியிடம் பேசுகிறார்; மனைவி கணவனிடம் பேசுகிறார். பெற்றோர் பிள்ளைகளிடம் அறிவுரை கூறுகிறார்கள். பிள்ளைகளுக்கும் சொல்ல வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன. ஆனால் ஒருவரை ஒருவர் உண்மையாகக் கேட்கத் தொடங்கும்போதுதான் பல குடும்பப் பிரச்சினைகள் குறையத் தொடங்குகின்றன.

ஒருவர் பேசும்போது உடனே பதில் சொல்லாமல், முதலில் அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதைப் புரிந்துகொள்ள முயற்சிப்பது ஒரு நல்ல பழக்கம். பல நேரங்களில் பிரச்சினைக்கு தீர்வு தேவைப்படுவதில்லை; தன்னை யாராவது புரிந்துகொண்டு கேட்க வேண்டும் என்பதே ஒருவரின் எதிர்பார்ப்பாக இருக்கும்.

அதனால்தான் விநாயகரின் பெரிய காதுகள் நம்மை அமைதியாகக் கேட்கச் சொல்வதாக நினைத்துப் பார்க்கலாம்.

அவருடைய சிறிய கண்கள் நம் கவனத்தை நினைவூட்டுகின்றன. இன்றைய வாழ்க்கையில் நம்மைச் சுற்றி கவனத்தைச் சிதறடிக்கும் விஷயங்கள் ஏராளம். கைபேசி, சமூக வலைத்தளங்கள், தேவையற்ற செய்திகள், பிறருடைய வாழ்க்கையைப் பற்றிய ஆர்வம் என்று நமது நேரமும் மனமும் பல திசைகளில் ஓடிக்கொண்டிருக்கிறது.



ஒரு செயலைத் தொடங்கினால் அதை முடிப்பதற்கான கவனம் நமக்கு இருக்க வேண்டும். நமது இலக்கு என்ன என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு, அதற்கான பாதையில் தொடர்ந்து நடக்க வேண்டும்.

விநாயகரின் சிறிய கண்கள், "பெரிய உலகத்தைப் பார்த்தாலும், செய்ய வேண்டிய வேலையில் கவனம் வைத்திரு" என்று நமக்கு நினைவூட்டுவது போல இருக்கின்றன.

அவருடைய தும்பிக்கை இன்னும் அழகான வாழ்க்கைப் பாடத்தைச் சொல்கிறது. யானையின் தும்பிக்கை மிகவும் வலிமையானது. அதே நேரத்தில், மிக நுணுக்கமான செயல்களையும் செய்யக்கூடியது. அதாவது, தேவையான இடத்தில் வலிமையாகவும், தேவையான இடத்தில் மென்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

வாழ்க்கையிலும் இதே அணுகுமுறை நமக்குத் தேவை.



எல்லா இடங்களிலும் பிடிவாதமாக இருப்பது புத்திசாலித்தனம் அல்ல. அதேபோல் எல்லாவற்றிற்கும் வளைந்து கொடுப்பதும் சரியல்ல. எப்போது உறுதியாக நிற்க வேண்டும், எப்போது விட்டுக்கொடுக்க வேண்டும் என்பதை அறிந்திருப்பதே வாழ்க்கையின் முதிர்ச்சி.

குடும்ப வாழ்க்கையில் இது மிகவும் முக்கியமானது. ஒரு சிறிய விஷயத்தைப் பெரிதாக்காமல் விட்டுக்கொடுப்பதால் ஒரு உறவு காப்பாற்றப்படலாம். அதே நேரத்தில், ஒரு முக்கியமான விஷயத்தில் நமது கொள்கையை விட்டுவிடாமல் இருப்பதும் அவசியமாக இருக்கலாம்.

வலிமையும் நெகிழ்வுத்தன்மையும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதைத் தும்பிக்கை நமக்கு உணர்த்துகிறது.

விநாயகரின் ஒரு தந்தம் பற்றியும் நம் மரபில் பல கருத்துகள் சொல்லப்படுகின்றன. அதிலிருந்து நாம் எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு அழகான வாழ்க்கைப் பாடம் – வாழ்க்கையில் எல்லாமே முழுமையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டியதில்லை என்பதே.



நம்மில் ஒவ்வொருவரிடமும் ஏதாவது ஒரு குறை இருக்கும். ஒருவருக்கு பணம் குறைவாக இருக்கலாம். இன்னொருவருக்கு கல்வி வாய்ப்பு குறைந்திருக்கலாம். ஒருவருக்கு குடும்பச் சூழ்நிலை சாதகமாக இல்லாமல் இருக்கலாம். இன்னொருவருக்கு உடல் சார்ந்த சவால் இருக்கலாம்.

ஆனால் அந்தக் குறைகள் நமது வாழ்க்கையின் முடிவு அல்ல.

நம்மிடம் இல்லாததைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தால், நம்மிடம் இருப்பதன் மதிப்பை உணர முடியாது. நம்மிடம் இருக்கும் திறமையை அறிந்து கொண்டு அதை வளர்த்துக் கொள்வதே முன்னேற்றத்திற்கான முதல் படி.

விநாயகரின் திருவுருவமே நமக்கு இதை அழகாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது. வெளித்தோற்றத்தில் முழுமையைத் தேடாதீர்கள்; உள்ளிருக்கும் திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

அவருடைய பெரிய வயிறு கூட ஒரு அழகான வாழ்க்கைச் செய்தியை நினைவூட்டுகிறது என்று எடுத்துக்கொள்ளலாம். வாழ்க்கையில் நடக்கும் எல்லா விஷயங்களையும் உடனடியாக வெளியே சொல்லிவிடாமல், சிலவற்றை மனதில் பக்குவமாக வைத்துக்கொள்ள வேண்டும்.



யாரோ ஒருவர் நம்மை விமர்சித்திருக்கலாம். யாரோ ஒருவர் நம்மைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம். யாரோ ஒருவர் நமக்கு மனவேதனை ஏற்படுத்தியிருக்கலாம்.

ஒவ்வொரு விஷயத்திற்கும் உடனடியாக பதில் சொல்ல வேண்டும் என்ற அவசியமில்லை.

சில விஷயங்களுக்கு காலமே பதில் சொல்லட்டும் என்று அமைதியாக இருப்பதும் ஒரு பெரிய அறிவு. நம்முடைய கோபத்தை உடனே வெளிப்படுத்தாமல் கட்டுப்படுத்திக் கொள்வதும் ஒரு வெற்றிதான்.

அதனால், வாழ்க்கை நமக்குக் கொடுக்கும் நல்லதையும் கெட்டதையும் பக்குவமாக ஏற்றுக்கொள்ளும் மனதை வளர்த்துக் கொள்ள வேண்டும்.



விநாயகரின் வாகனமான மூஞ்சுறு கூட நமக்கு ஒரு சிந்தனையைத் தருகிறது. மிகப் பெரிய உருவம் கொண்ட விநாயகருக்கு மிகச் சிறிய உயிரினமான மூஞ்சுறு வாகனமாக இருப்பது ஒரு அழகான குறியீடாகப் பார்க்கப்படுகிறது.

மனிதனுடைய ஆசைகளும் அப்படித்தான். ஆசை சிறியதாகத் தொடங்கி, நாளடைவில் பெரிதாகி நம்மையே ஆளத் தொடங்கிவிடும். பணம் வேண்டும், பதவி வேண்டும், புகழ் வேண்டும், இன்னும் வேண்டும் என்ற எண்ணம் முடிவில்லாமல் செல்லும்.

ஆசைகளை அழித்துவிட வேண்டும் என்பதல்ல; ஆசைகளை நாம்தான் கட்டுப்படுத்த வேண்டும். ஆசைகள் நம்மை ஆளக்கூடாது.

அதனால் தான் விநாயகரின் காலடியில் இருக்கும் மூஞ்சுறுவைப் பார்க்கும்போது, நமது மனத்தையும் ஆசைகளையும் நாமே வழிநடத்த வேண்டும் என்ற எண்ணத்தை நினைவில் கொள்ளலாம்.

விநாயகரின் கையில் இருக்கும் மோதகம் இனிமையை நினைவூட்டுகிறது. வாழ்க்கையில் நாம் எவ்வளவு உழைத்தாலும், அந்த உழைப்பின் இறுதியில் கிடைக்கும் சிறிய மகிழ்ச்சிகளையும் ரசிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.



ஒரு குடும்பம் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவது, குழந்தையுடன் சில நிமிடங்கள் விளையாடுவது, பெற்றோருடன் பேசுவது, நண்பரின் நலனை விசாரிப்பது, கோயிலுக்குச் சென்று அமைதியாக சில நிமிடங்கள் இருப்பது போன்ற சிறிய விஷயங்களில்தான் வாழ்க்கையின் உண்மையான மகிழ்ச்சி பல நேரங்களில் மறைந்திருக்கிறது.

பணம் சம்பாதிப்பது வாழ்க்கையின் ஒரு பகுதி. ஆனால் பணம் சம்பாதிப்பதற்காக வாழ்க்கையையே இழந்துவிடக்கூடாது.

விநாயகரை வணங்கும் போது நாம் கேட்பது பெரும்பாலும் "தடைகள் நீங்க வேண்டும்" என்பதுதான்.

ஆனால் தடைகள் அனைத்தையும் இறைவன் நீக்கிவிட வேண்டும் என்று மட்டும் எதிர்பார்ப்பதைவிட, தடைகளை எதிர்கொள்ளும் அறிவையும், பொறுமையையும், துணிவையும் தர வேண்டும் என்று வேண்டுவது இன்னும் சிறந்த பிரார்த்தனையாக இருக்கலாம்.

வாழ்க்கையில் தடைகள் வராமல் இருப்பது வெற்றி அல்ல. தடைகள் வந்தபோதும் மனம் உடையாமல் அவற்றைக் கடந்து செல்வதே வெற்றி.

அதனால் தான் எந்த ஒரு நல்ல காரியத்தையும் தொடங்கும்போது முதலில் விநாயகரை நினைக்கிறோம். அந்த வழிபாடு நமக்கு ஒரு மனத் தயாரிப்பையும் தருகிறது. "நான் தொடங்கும் செயல் நல்லபடியாக நிறைவேற வேண்டும்" என்ற நம்பிக்கையுடன் நாம் முதல் அடியை எடுத்து வைக்கிறோம்.

புதிய வீடு கட்டினாலும், புதிய தொழில் தொடங்கினாலும், குழந்தையின் கல்வியைத் தொடங்கினாலும், திருமணம் போன்ற சுபகாரியம் நடைபெற்றாலும் – முதலில் விநாயகரை நினைப்பது நமது பண்பாட்டின் அழகான மரபு.

அந்த மரபுக்குப் பின்னால் ஒரு பெரிய வாழ்க்கை உணர்வும் இருக்கிறது. எந்தச் செயலைத் தொடங்கினாலும் அவசரப்படாமல், இறைவனை நினைத்து, மனதை அமைதிப்படுத்தி, செய்ய வேண்டியதைச் சரியாகச் செய்ய வேண்டும்.

விநாயகரை வழிபடுவதில் மிகப் பெரிய அழகு இதுதான். அவர் நம்மிடம் பெரிய சடங்குகளை மட்டும் எதிர்பார்ப்பவர் என்ற எண்ணத்தைவிட, உண்மையான மனதுடன் அழைத்தால் போதும் என்ற பக்தி உணர்வே நம் மக்களிடம் ஆழமாக உள்ளது.

மஞ்சளால் ஒரு சிறிய பிள்ளையார் பிடித்து வைத்தாலும் பக்தி இருக்கிறது. வீட்டில் இருக்கும் சிறிய விநாயகர் சிலைக்கு அருகம்புல்

வைத்து வணங்கினாலும் பக்தி இருக்கிறது. கோயிலுக்குச் சென்று மனம் நிறைந்து ஒரு நிமிடம் கண்களை மூடினாலும் பக்தி இருக்கிறது.

இறைவனுக்கு நாம் கொடுப்பதைவிட, நாம் எந்த மனநிலையுடன் கொடுக்கிறோம் என்பதுதான் முக்கியம்.

இந்த விநாயகர் சதுர்த்தியில், வழக்கம்போல விநாயகரை வழிபடுவோம். கொழுக்கட்டை படைப்போம். குடும்பத்துடன் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவோம். ஆனால் அதோடு சேர்த்து, அவருடைய திருவுருவத்தை ஒரு முறை அமைதியாகப் பார்த்து, அவர் நமக்குச் சொல்லும் வாழ்க்கைப் பாடங்களையும் நினைத்துப் பார்ப்போம்.

பெரிதாகச் சிந்திப்போம்.
பொறுமையாகக் கேட்போம்.
செயலில் கவனம் வைப்போம்.
தேவையான இடத்தில் வளைந்து கொடுப்போம்.
நம்முடைய ஆசைகளை நாமே கட்டுப்படுத்துவோம்.
வாழ்க்கையின் சிறிய மகிழ்ச்சிகளையும் ரசிப்போம்.
தடைகள் வந்தால் மனம் தளராமல் முன்னேறுவோம்.

இவை அனைத்தும் தனித்தனியான அறிவுரைகள் அல்ல. நாம் ஒவ்வொருவரும் நாள்தோறும் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய எளிய வழிகள்.

நம் வீட்டு பூஜையறையில் இருக்கும் விநாயகர், தினமும் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நாம் அவரைப் பார்க்கும் ஒவ்வொரு முறையும், அவருடைய உருவத்தில் மறைந்திருக்கும் இந்தச் சிறிய வாழ்க்கைப் பாடங்களை நினைத்துப் பார்த்தால் போதும்.

நம்முடைய வாழ்க்கையிலும் மாற்றம் மெதுவாகத் தொடங்கும்.

இந்த விநாயகர் சதுர்த்தி நமக்கு வெறும் ஒரு விழாவாக மட்டும் இல்லாமல், நம்மை நாமே சற்று மாற்றிக்கொள்ளும் ஒரு நல்ல தொடக்கமாகவும் அமையட்டும்.

விநாயகப் பெருமானின் திருவருளால், நம் இல்லங்களில் மகிழ்ச்சியும், மனங்களில் அமைதியும், செயல்களில் வெற்றியும், குடும்பங்களில் ஒற்றுமையும் நிறையட்டும்.

"பிள்ளையார் சுழி" போட்டு தொடங்கும் ஒவ்வொரு நல்ல முயற்சியும், நல்ல எண்ணத்தோடும் நம்பிக்கையோடும் தொடரட்டும்.

விநாயகப் பெருமானின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.
விநாயகா போற்றி!
விக்னேஸ்வரா போற்றி!
பிள்ளையாரப்பா போற்றி!

கட்டுரையாக்கம்:
உமாராணி சொக்கலிங்கம்.
நற்சாந்துபட்டி ஈரோடு.










முனைவர்
நா.வள்ளி சொக்கலிங்கம்
மேனாள் முதல்வர்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி


# மஞ்சள் நீர் வாசகமுறி

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு" (குறள் 60)

இல்லறத்தைச் சிறக்கச் செய்யும் மக்கட்பேறு வாய்க்கப் பெறாதவர்கள் இன்னொருவர் பெற்ற பிள்ளையை எடுத்து வளர்ப்பது என்பது சமுதாயத்தில் தொன்று தொட்டுக் காணப்படுகின்ற வழக்கம்தான். தேவகி பெற்ற கண்ணனை, யசோதை தன் மகனாகச் சிறப்புடன் வளர்ப்பதைக் கண்ட ஆய்ச்சியர்கள் "தத்துக் கொண்டாள் கொலோ தானே பெற்றாள் கொலோ?" என்று வியப்பதாகப் பெரியாழ்வார் பாடியுள்ளார்.

பிள்ளையை எடுத்து வளர்த்தலைத் 'தத்து எடுத்தல் என்பர். அப்பிள்ளைக்குத் தத்துப் பிள்ளை அல்லது தத்துப் புத்திரன் என்று பெயர். இவ்வழக்கம் நாட்டுக்கோட்டை நகரத்தார்களிடையே அதிகமாகக் காணப்படுகின்றது. அவர்கள் இதைச் 'சுவீகாரம் செய்தல் அல்லது 'பிள்ளை கூட்டுதல் என்று குறிப்பிடுகின்றனர். பிள்ளை கூட்டும் சடங்கைத் தங்கள் குலமுறைப்படியும் சட்டப்படியும் செய்கின்றனர்.

பெரும்பாலும் திருமணப் பருவத்திலுள்ள ஆண்பிள்ளையைத்தான் தங்கள் வாரிசாகக் கூட்டுகின்றனர். பெண்பிள்ளையைச் சுவீகாரம் செய்யும் வழக்கம் இல்லை. ஒருவருக்குப் பெண் குழந்தைகள் இருந்தாலும் தங்கள் குடும்பப் பெயர் விளங்க வேண்டும் என்பதற்காக ஆண் பிள்ளையைச் சுவீகாரம் செய்து கொள்ளுகின்றனர். பிள்ளை கூட்டிக் கொள்ளும்போது தங்கள் குடும்பப் பெயரை அவனுக்கு இட்டுச் சட்டப்படி பதிவு செய்கின்றனர்.

நகரத்தார்களிடையே ஒன்பது கோயில் பிரிவுகள் காணப்படுகின்றன. ஒரு கோயில் பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்கள் பிரிவைச் சேர்ந்த குடும்பத் திலிருந்துதான் பிள்ளையைக் கூட்டிக் கொள்கின்றனர். சுவீகாரம் செய்து கொள்ளும் போது பிள்ளையைப் பெற்றவர்கள் தாங்கள் பெற்ற பிள்ளைக்கு 'மஞ்சள் நீர் கொடுத்துக் குடிக்கச் செய்து, பிள்ளையைக் கூட்டிக் கொள்ளும் பெற்றோரிடம் ஒப்படைப்பது முக்கியச் சடங்காக நடைபெறுகிறது.

காரைக்குடியில் ஒரு குடும்பத்தாரிடம் ஓலைச் சுவடி ஒன்று உள்ளது. அந்த ஓலைச் சுவடி ஒரு நகரத்தார் குடும்பத்தார் சுவீகாரம் செய்து கொண்ட செய்தியைக் குறிப்பிடுகிறது. கி.பி.1854 இல் நடந்த நிகழ்ச்சி. நகரத்தார் வசிக்கும் ஊர்களுள் ஒன்றான வேகுப்பட்டியில் பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்த ஒரு குடும்பத்திலிருந்து கிருட்டிணன் என்பவரை காரைக்குடி பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்த ஒரு குடும்பத்தார் தங்கள் வாரிசாகக் கூட்டிக் கொண்டுள்ளர். அதைக் குறித்து இரு குடும்பத்தாரும் ஓர் உடன்படிக்கை முறி(ஒப்பந்தம்) எழுதிக் கொண்டுள்ளனர். பிள்ளை கூட்டிக் கொள்பவருக்குப் பிற்காலத்தில் குழந்தைகள் பிறந்தால் குடும்பச் சொத்துக்களை எவ்வாறு பிரித்துக் கொள்வது, வளர வந்த பிள்ளைக்குத் தாய்மாமன் சடங்குகள் யார் செய்வது போன்ற

செய்திகள் தீர ஆலோசித்துத் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. ஓலைச் சுவடி இதை 'மஞ்சள் நீர் வாசக முறி என்று குறிப்பிடுகிறது. இறுதியில் இரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் கையெழுத்திட்டுத் தங்கள் ஒப்புதலைத் தெரி வித்துள்ளனர். ஓலைச்சுவடியில் காணப்படும் வாசகங்களாவது:



"ஆனந்த வருஷம் கார்த்திகை மீ. 23உ கல்வாச நாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான ராஜநாராயணபுரத்தில் பிள்ளையார்பட்டி திருவேட்பூருடையான் முருகன் செட்டி லெட்சுமணனுக்கு இவ்வூர் யின்னபடி மேற்படிபுரம் உடையான் நல்லகருப்பன் செட்டி கருப்பாத்தான் மகன் கிஷ்டனனை மஞ்சள் நீர் பெத்த புத்திரனாக பிள்ளைவிட்ட படியினாலே லெட்சுமணன் சீட்டு கொட்டி தேவதானம் கோயில் குளம் சகலமும் கல்லும் புல்லும் பூமியும் சந்திராதித்தர் உள்ள வரைக்கும் பரம்பரையாக கிருட்டினன் ஆண்டு அனுபவித்துக் கொள்ளவும். இனிமேல் லெட்சுமணனுக்குப் பிள்ளை பிறந்தால் கிருஷ்டினனுக்கு ஒரு பங்கும் பிறக்கிற பிள்ளைகளுக்கு ஒரு பங்குமாக ஆண்டு அனுபவித்துக் கொள்ளவும் பிள்ளைகளுக்கு கல்யாணம் புதுமை சீதனம் பொதுவில் செய்கிறது. லெட்சுமி சீதனம்

பூசனம் சகலமும் பொதுவில் வாங்கிக் கொள்ளுகிறது. கிருஷ்ணனுக்கு மாமச்சடங்கு சாத்தன் செட்டி பெரிய கருப்பன் உள்ளிட்டார் செய்கிறது. முருகன்செட்டி ராமநாதன் உள்ளீட்டாரும் நல்லகருப்பன்செட்டி கருப்பாத்தான் மகன் உள்ளிட்டாரும் சாத்தப்பசெட்டி பெரியகருப்பன் உள்ளிட்டாரும் சின்னான் செட்டி சேக்கப்பன் உள்ளிட்டாரும் சம்மதித்து சொல்ல இந்த வாசகமுறி யெழுதினேன்.

இவ்வூரில் யின்னபடி யின்னபுரம் உடையான் வெங்கிடாசலம் செட்டி சிதம்பரம் கையெழுத்து

முருகன் செட்டி லெட்சுமணன்
முருகன் செட்டி ராமநாதன் உள்ளிட்டார்
மேற்படி ராமநாதன்
நல்ல கருப்பன் செட்டி கருப்பாத்தான்
மேற்படி அண்ணாமலை உள்ளிட்டார்
சின்னான் செட்டி சேக்கப்பன் உள்ளிட்டார் சாத்தன் செட்டி
பெரியகருப்பன் உள்ளிட்டார்".

அவர்கள், பிள்ளை வந்த முரு.லெ.கிருஷ்ணன் செட்டியார் சிவகங்கை சமஸ்தானத்திலிருந்து வன்னியஞ் சூரைக்குடிக் கோயிலை ஒப்பந்தமாகப் பெற்றுத் திருப்பணிகள் செய்தார்.

வன்னியஞ் சூரைமாநகர் கோயிலில் தனது தந்தையின் நினைவாக அவரது சிலாவுருவத்தையும் தாயார் லெட்சுமி ஆச்சி நினைவாக அவர்களது சிலா உருவத்தையும் வைத்துள்ளார். கோயில் திருப்பணிகள் எல்லாவற்றையும் செவ்வனே முடித்து கும்பாபிஷேகம் நடத்தியுள்ளார்.

இக்கோயிலுக்கு அருகில் உள்ள கண்மாய்க்குக் கிருஷ்ணன் செட்டியார் கண்மாய் என்ற பெயர் இன்றும் உள்ளது.

இவர் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களை அழைத்து வந்து சூரைமாநகர்ப் புராணத்தைப் பாடுமாறு வேண்டிக் கொண்டார். இவரது வேண்டுகோளை ஏற்று மகாவித்வான் அவர்கள் சூரைமாநகர்ப் புராணம் பாடினார். ஒரு பாடலுக்கு ஒரு பணம் வீதம்





காறக்குடி முரு. லெட்சுமணன் செட்டியார் பாரி லெட்சுமி ஆச்சி மீனாட்சி துணை



உ காறகுடி
முருகப்ப செட்டியார் மகன்
லெட்சுமணன் செட்டியாற்

பிள்ளையவர்களுக்கு வழங்கிக் கௌரவித்தார் கிருஷ்ணன் செட்டியார்.

இவர் சிறந்த அறப்பணிகளைச் செய்துள்ளமையைப் பாராட்டி பிரிட்டிஷார் ஆட்சி காலத்தில் விக்டோரியா மகாராணியார் 1877 ஆம் ஆண்டு ஒரு பாராட்டுப் பத்திரம் வழங்கியுள்ளார்.

இவரது கொடைத்தன்மையைப் பாராட்டி,

"வேவுப்பட்டி கிருஷ்ணனுக்கு
வாழ்வு வந்தது பாருங்கடி"



Certificate Presented to Muna Runa Krishnan Chettiar

of K a r a i k u d i.

in the name of

THE EMPRESS OF I N D I A.

January. 1st 1877.

On demand of His Excellency the Viceroy and Governor-General this Certificate is presented in the name of the Most Gracious Majesty Victoria, Empress of India, to Muna Runa Krishnan Chettiar of Karaikudi, son of Lechumanan Chettiar in recognition of the part he has taken in connection with Public charity in the District of Madura.

(Sd) Buckingham of Kandes

January 1st 1877.

என்ற நாட்டுப்புறப் பாடல் ஒன்றும் வழக்கில் இருந்துள்ளது.

– தொடரும்

# மழலை மழைத்துளிகள்..!!!



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்..!!

## உழைப்பே உயர்வு

எங்கள் தோட்ட அழகைப்பார்
… தோட்டக் கலைஞரின் உழைப்பாகும்;
எங்கும் மின்னும் விளக்குகள் பார்
… மின்னியல் கலைஞரின் உழைப்பாகும்;
தங்கும் வீட்டின் சிறப்பைப் பார்
… கட்டடக் கலைஞரின் உழைப்பாகும்;
இங்கே சொல்வோம் பலமாக
… உழைப்பால் உயர்வு நமதாகும்;






## என் அட்டவணை

அம்மா கொடுப்பார் வெள்ளைத்தாள்
… அதிலே பூக்கள் வரைந்திடுவேன்;
அப்பா கேட்கும் வேளையிலே
… அழகாய்ப் பாட்டும் பாடிடுவேன்;
அத்தை மாமா பாராட்ட
… அசத்தும் நடனம் ஆடிடுவேன்;
அண்ணன் அக்கா உடனிருந்தால்
… அலுக்காமல் விளையாடிடுவேன்;






# மடியேந்தும் தாய் அல்லவா ..!

பூக்களால் சல்லடையொத்த
உருவங்கொண்டு
பூமிக் குடிலுக்குக் கூரை உண்டு!

உடனடித் தேவைக்கும்
உடல் வெப்பம் தணிப்பதற்கும்
உயர்வெப்பம் கூட்டும் செயலை
செய்வது எதற்கு?

மன்னுயிர் வாழ்வதற்கு ஏற்ற தொண்டு!
மனிதர்கள் அதனை வீழ்ப்பது ஏன் இங்கு?

கதிர் விடுக்கும் வீச்சால்
கருகவிடாது காக்கும்
மடியேந்தும் தாய் அல்லவா
ஓசோன்?

புரிந்தும் செய்கின்றோம்
புரியும் செயல் ஒவ்வாதென!
இயற்கைக்கு இடர் அளித்துவிட்டு
இன்னுமொரு கோள் தேடுவதற்கா?

மண்ணில் வேர்விட்டு
விண்ணுக்குப் பாலமிடும்
மரத்தையாவது வளர்ப்போம்!

ஓசோன் படலத்திற்கு
ஒவ்வாததை செய்யாது
ஒருமித்த எண்ணத்தில் நிற்போம்!
தலைமுறைகள் தாண்டி
வாழ வழி செய்வோம்!



– கவிஞர் மாலதி இராமலிங்கம்,
புதுச்சேரி.

வெற்றிப் பாதை – 2

# வெற்றியைத் தேடாதே... உன்னைத் தேடு!





– இராம.சொக்கலிங்கம்
நற்சாந்துபட்டி.

நம்மில் பலர் வாழ்க்கையில் ஏதாவது ஒரு கட்டத்தில், "எப்போது எனக்கு நல்ல காலம் வரும்?", "எப்போது நான் முன்னேறுவேன்?", "எப்போது எனக்கும் ஒரு வெற்றி கிடைக்கும்?" என்று நினைத்துக் கொண்டிருப்போம். சிலர் அந்த வெற்றியைத் தேடி ஓடிக்கொண்டே இருப்பார்கள். இன்னும் சிலர், மற்றவர்கள் எங்கே சென்றிருக்கிறார்கள் என்று பார்த்துக்கொண்டே, தாங்களும் அந்த இடத்தை அடைய வேண்டும் என்று அவசரப்படுவார்கள்.

ஆனால் ஒரு சிறிய உண்மையை நாம் பல நேரங்களில் கவனிப்பதில்லை.

**வெற்றி என்பது நாம் ஓடிச் சென்று பிடித்துக்கொள்ள வேண்டிய ஒன்று மட்டுமல்ல. அதற்குத் தகுதியான மனிதராக நாம் மாறும்போது, அதன் பாதையும் நமக்காகத் திறக்கத் தொடங்குகிறது.**



ஒரு விதையை மண்ணில் போட்டுவிட்டு, "நாளைக்கே மரமாக வேண்டும்" என்று நாம் கட்டளையிட முடியாது. முதலில் அது மண்ணுக்குள் அமைதியாகத் தனது வேலையைச் செய்ய வேண்டும். வேர் பிடிக்க வேண்டும். சிறிது சிறிதாக வளர வேண்டும். வெளியே எதுவும் நடக்காதது போலத் தோன்றினாலும், உள்ளே ஒரு பெரிய மாற்றம் நடந்து கொண்டிருக்கும்.

நமது வாழ்க்கையும் அப்படித்தான்.

சில காலங்களில் நாம் எவ்வளவு முயற்சி செய்தாலும் எந்த முன்னேற்றமும் தெரியாமல் இருக்கலாம். நம்மைவிட குறைவாக முயற்சி செய்கிறவர் முன்னேறுவது போலத் தோன்றலாம். நேற்று நம்முடன் இருந்தவர் இன்று நம்மை விட பல படிகள் முன்னால் சென்றிருக்கலாம். அப்போது நமக்குள் ஒரு கேள்வி வரும்.

**"நான் மட்டும் ஏன் இப்படியே இருக்கிறேன்?"**

அந்தக் கேள்விக்கு உடனடியாக வெளியில் பதில் தேட வேண்டியதில்லை. சில நேரங்களில் அந்தப் பதில் நமக்குள்ளேயே இருக்கும்.

- நாம் நேற்று இருந்த அதே மனிதராகத்தான் இன்றும் இருக்கிறோமா?
- நமது பழக்கங்களில் ஏதாவது மாறியிருக்கிறதா?
- புதிதாக ஏதாவது கற்றுக்கொண்டிருக்கிறோமா?
- நமக்கு பயமாக இருந்த ஒன்றை எதிர்கொள்ள முயற்சி செய்திருக்கிறோமா?
- நம்முடைய தவறுகளை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து ஏதாவது கற்றுக்கொண்டிருக்கிறோமா?



இந்தக் கேள்விகளுக்கான பதில்கள்தான் நமது அடுத்த கட்ட வாழ்க்கையைத் தீர்மானிக்கத் தொடங்கும்.

வெற்றி வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் இருக்கும். ஆனால் வெற்றிக்காகத் தயாராக வேண்டும் என்ற எண்ணம் எல்லோரிடமும் இருப்பதில்லை. ஒரு நல்ல வேலையை விரும்புவது எளிது; அதற்குத் தேவையான திறமையை வளர்த்துக்கொள்வது தான் சிரமம். ஒரு நல்ல தொழிலைத் தொடங்க வேண்டும் என்று நினைப்பது எளிது; அதற்குத் தேவையான பொறுமையையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பது தான் சிரமம். நல்ல வாழ்க்கை வேண்டும் என்று ஆசைப்படுவது எளிது; அதற்காக நம்முடைய சில பழக்கங்களை மாற்றிக்கொள்வது தான் உண்மையான சவால்.

அதனால் தான், வெற்றியைத் தேடுவதற்கு முன் நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் ஒரு விஷயத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்றால், அதைப் பற்றி தொடர்ந்து கற்றுக்கொள்ள வேண்டும். தினமும் ஒரு மணி நேரம் படிப்பது, ஒரு புதிய விஷயத்தைப் புரிந்துகொள்வது, ஒரு தவறை மீண்டும் செய்யாமல் இருப்பது, நேற்று முடியாத ஒன்றை இன்று முயற்சி செய்வது... இவை எல்லாமே சிறிய விஷயங்களாகத் தெரியும்.

ஆனால் வாழ்க்கையில் பெரிய மாற்றங்கள் பெரும்பாலும் இப்படிப்பட்ட சிறிய முயற்சிகளில்தான் உருவாகின்றன.

ஒரு நாள் உடற்பயிற்சி செய்தால் உடல் மாறிவிடாது.
ஒரு நாள் படித்தால் அறிவு முழுமையாகிவிடாது.
ஒரு நாள் முயற்சி செய்தால் வாழ்க்கை மாறிவிடாது.

**ஆனால் தொடர்ந்து செய்தால்?**

அதுதான் மாற்றம்.

நாம் பல நேரங்களில் பெரிய முடிவுகளை எடுக்கிறோம். "இனி தினமும் நேரத்திற்கு எழுவேன்." "இனி வீணாக நேரத்தை செலவிட மாட்டேன்." "இனி கோபப்பட மாட்டேன்." "இனி பணத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன்." என்று பல உறுதிமொழிகளை எடுத்துக்கொள்கிறோம்.

ஆனால் சில நாட்களுக்குப் பிறகு பழைய வாழ்க்கைக்குத் திரும்பி விடுகிறோம்.

இதற்குக் காரணம் நமக்கு ஆசை இல்லாதது அல்ல. தொடர்ச்சியான பழக்கம் உருவாகாததுதான்.

இதற்குக் காரணம் நமக்கு ஆசை இல்லாதது அல்ல. தொடர்ச்சியான பழக்கம் உருவாகாததுதான்.



ஒரு நல்ல வாழ்க்கையை உருவாக்குவது பெரிய முடிவுகளால் மட்டும் நடப்பதில்லை. தினசரி எடுக்கும் சிறிய முடிவுகளால் அது உருவாகிறது.

- இன்று தேவையில்லாத ஒரு செலவைத் தவிர்ப்பது.
- இன்று அரை மணி நேரம் புதிதாக ஒன்றைக் கற்றுக்கொள்வது.
- இன்று கோபத்தில் பதில் சொல்லாமல் அமைதியாக இருப்பது.
- இன்று முடியாது என்று நினைத்த ஒரு வேலையைத் தொடங்குவது.
- இன்று நேற்று செய்த ஒரு தவறை மீண்டும் செய்யாமல் இருப்பது.

இவை எல்லாம் வெற்றிக்கான சிறிய அடிகள்.

நாம் அவற்றைச் சிறியதாக நினைக்கலாம். ஆனால் வாழ்க்கை அவற்றைச் சேர்த்து ஒரு பெரிய மாற்றமாக மாற்றிவிடும்.

இன்னொரு முக்கியமான விஷயம் –
மற்றவர்களுடன் நம்மை ஒப்பிடுவதை நிறுத்த வேண்டும்.

அவர் இவ்வளவு சம்பாதிக்கிறார்.
அவருக்கு சொந்த வீடு இருக்கிறது.
அவர் தொழில் நன்றாகச் செல்கிறது.
அவருடைய குழந்தைகள் நன்றாகப் படிக்கிறார்கள்.
அவர் வெளிநாடு செல்கிறார்.

இப்படி ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் நமது வாழ்க்கையுடன் ஒப்பிட்டுக் கொண்டிருந்தால், நம்மிடம் இருப்பதை ரசிக்கவே முடியாது.

ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையின் நேரம் வேறுபட்டது.

ஒருவருக்கு இருபத்தைந்து வயதில் கிடைத்த வாய்ப்பு, இன்னொருவருக்கு நாற்பது வயதில் கிடைக்கலாம். ஒருவர் விரைவாக உயரலாம். இன்னொருவர் மெதுவாக உயரலாம்.

## மெதுவாகச் செல்வது தோல்வி அல்ல.
## நின்று விடுவது தான் பிரச்சினை.



ஒரு மரம் வளர்வதைப் பாருங்கள். இன்று விதைத்துவிட்டு நாளை நிழல் கிடைக்க வேண்டும் என்று யாரும் எதிர்பார்ப்பதில்லை. அது வளருவதற்கு காலம் தேவை. தண்ணீர் தேவை. பராமரிப்பு தேவை. சில நேரங்களில் வெயிலும் மழையும் தேவை.

மனித வாழ்க்கையும் அப்படித்தான்.

நமக்கு வரும் சிரமங்கள் அனைத்தும் நம்மைத் தடுக்க வந்தவை என்று நினைக்க வேண்டியதில்லை. சில சிரமங்கள் நம்மை வலிமையாக்குவதற்காக வருகின்றன. சில தோல்விகள் நாம் செல்லும் பாதையை மாற்றுவதற்காக வருகின்றன. சில தாமதங்கள் நம்மை இன்னும் தயாராகவில்லை என்பதை நினைவூட்டுகின்றன.

அதனால் தோல்வி வந்துவிட்டால், "எல்லாம் முடிந்துவிட்டது" என்று நினைக்க வேண்டாம்.

சிறிது நேரம் அமைதியாக இருங்கள்.

"இதிலிருந்து நான் என்ன கற்றுக்கொள்ளலாம்?" என்று கேளுங்கள்.

அந்த ஒரு கேள்வி நமது மனநிலையை மாற்றிவிடும்.

தோல்வியிலிருந்து பாடம் கற்றுக்கொண்ட மனிதன் மீண்டும் அதே இடத்தில் நிற்பதில்லை. அவர் முன்னால் செல்கிறாரோ, இல்லையோ, குறைந்தபட்சம் முந்தைய மனிதராக இருப்பதில்லை.

நம்முடைய பயமும் அப்படித்தான்.

"என்னால் முடியுமா?" என்ற பயம் பல நேரங்களில் நம்மைத் தொடங்கவே விடாது.

புதிய தொழில் தொடங்க வேண்டும் என்று நினைப்போம். ஆனால் தோல்வி வந்துவிடுமோ என்று பயப்படுவோம்.

புதிய வேலை தேட வேண்டும் என்று நினைப்போம். ஆனால் நம்முடைய வயதை நினைத்து தயங்குவோம்.

ஒரு புதிய திறமையைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைப்போம். ஆனால் "இதை இப்போது கற்றுக்கொள்ள முடியுமா?" என்று நம்மையே கேட்டு நிறுத்திக்கொள்வோம்.

ஆனால் உண்மையில் தைரியம் என்பது பயமே இல்லாமல் இருப்பது அல்ல.

பயம் இருந்தாலும் ஒரு அடியை முன்னால் வைப்பதுதான் தைரியம்.



முதல் நாள் அந்த அடி சிறியதாக இருக்கலாம். ஆனால் அந்த முதல் அடிதான் அடுத்த அடிக்கான நம்பிக்கையைத் தரும்.

நம்முடைய வாழ்க்கையில் சில நேரங்களில் யாரும் நம்மை பாராட்டாமல் இருக்கலாம். நாம் செய்யும் முயற்சியை யாரும் கவனிக்காமல் இருக்கலாம். நாம் கற்றுக்கொள்வதை யாரும் பாராட்டாமல் இருக்கலாம்.

பரவாயில்லை.

ஒவ்வொரு முயற்சிக்கும் உடனடியாக கைதட்டல் கிடைக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

சில வெற்றிகள் முதலில் அமைதியாகத்தான் உருவாகும்.

ஒரு மாணவன் தினமும் அமைதியாகப் படிப்பதை யாரும் கவனிக்காமல் இருக்கலாம். ஆனால் தேர்வு முடிவு வரும் நாளில் அந்த உழைப்பு தெரியும்.

ஒருவர் தினமும் கொஞ்சம் பணத்தைச் சேமிப்பதை யாரும் கவனிக்காமல் இருக்கலாம். ஆனால் சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்தச் சிறிய சேமிப்பின் அருமை தெரியும்.

ஒருவர் தினமும் ஒரு புதிய திறமையைக் கற்றுக்கொள்வதை யாரும் கவனிக்காமல் இருக்கலாம். ஆனால் ஒரு நாள் அந்தத் திறமை அவருக்கான புதிய கதவைத் திறக்கும்.

அதனால் பாராட்டு கிடைக்கிறதா என்று பார்க்காமல், நம்முடைய வளர்ச்சியைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்.

நம்முடைய உண்மையான போட்டி மற்றவர்களுடன் அல்ல.

நேற்று இருந்த நம்முடன்தான்.

நேற்று ஒரு பக்கம் படித்திருந்தால், இன்று இரண்டு பக்கங்கள் படிக்கலாம்.

நேற்று ஒரு வேலையைத் தள்ளிப்போட்டிருந்தால்,
இன்று அதைத் தொடங்கலாம்.

நேற்று தேவையில்லாமல் செலவு செய்திருந்தால், இன்று ஒரு சிறிய தொகையையாவது சேமிக்கலாம்.

நேற்று கோபத்தில் பேசியிருந்தால், இன்று ஒரு வார்த்தையை குறைத்துப் பேசலாம்.

இந்தச் சிறிய வெற்றிகளை நாம் கவனிக்கத் தொடங்கும்போது, நம்மைப் பற்றிய நமது எண்ணமும் மாறத் தொடங்கும்.

"என்னால் முடியாது" என்ற எண்ணம் மெதுவாக,

"முயற்சி செய்தால் என்னால் முடியும்" என்ற நம்பிக்கையாக மாறும்.

அதுதான் நமக்குள் உருவாக வேண்டிய மிகப் பெரிய மாற்றம்.

வெற்றி என்பது பணம், பதவி, புகழ் மட்டுமல்ல. அவை வாழ்க்கையின் ஒரு பகுதி. உண்மையான வெற்றி என்பது, நம்முடைய வாழ்க்கையை நாமே கொஞ்சம் கொஞ்சமாகச் சிறப்பாக மாற்றிக் கொண்டிருப்பதிலும் இருக்கிறது.

நேற்றைவிட இன்று சிறந்த மனிதராக இருப்பது.
தவறிலிருந்து கற்றுக்கொள்வது.
குடும்பத்திற்காக பொறுப்புடன் இருப்பது.
கொடுத்த வாக்கைக் காப்பது.
உழைப்பை மதிப்பது.
நமக்குக் கிடைத்த வாய்ப்பை வீணாக்காமல் பயன்படுத்துவது.
இவை எல்லாமே வெற்றிதான்.

சில நேரங்களில் நாம் மிகப் பெரிய இலக்குகளை வைத்துக் கொண்டு, அந்த இலக்கை அடையும் வரை நம்முடைய வாழ்க்கையை ரசிக்க மறந்துவிடுகிறோம்.

"அந்த வீடு கிடைத்த பிறகு சந்தோஷமாக இருப்பேன்."
"அந்த வேலை கிடைத்த பிறகு நிம்மதியாக இருப்பேன்."
"அவ்வளவு பணம் வந்த பிறகு வாழ்க்கையை ரசிப்பேன்."
"அந்த இடத்தை அடைந்த பிறகு நான் வெற்றி பெற்றவன்."

இப்படி வாழ்க்கையை எப்போதும் எதிர்காலத்திற்குத் தள்ளிக்கொண்டே இருக்கிறோம்.

ஆனால் வாழ்க்கை இன்று நடக்கிறது.

இன்றைய நாளையும் வாழ வேண்டும். அதே நேரத்தில் நாளைக்காக நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதுதான் சமநிலை.

வெற்றியைத் தேடி ஓடிக்கொண்டே இருக்க வேண்டியதில்லை.

நமது வேலையைச் சரியாகச் செய்வோம்.
நமக்குத் தெரியாததை கற்றுக்கொள்வோம்.
தவறுகளை ஏற்றுக்கொள்வோம்.
பயத்தைத் தாண்டி முயற்சி செய்வோம்.
சிறிய முன்னேற்றங்களைக் கொண்டாடுவோம்.
மற்றவர்களுடன் ஒப்பிடாமல் நமது பாதையில் நடப்போம்.

ஒருநாள் திரும்பிப் பார்த்தால், நாம் தேடிக்கொண்டிருந்த வெற்றி நம்மை நோக்கி மெதுவாக வந்து கொண்டிருந்ததை உணரலாம்.

ஏனென்றால் வெற்றி என்பது எங்கோ தொலைவில் இருக்கும் ஒரு இலக்கு அல்ல.

நாம் தினமும் உருவாக்கிக் கொண்டிருக்கும் மனிதனின் மற்றொரு பெயர்தான் வெற்றி.

"அந்த வீடு கிடைத்த பிறகு சந்தோஷமாக இருப்பேன்."

"அந்த வேலை கிடைத்த பிறகு நிம்மதியாக இருப்பேன்."

"அவ்வளவு பணம் வந்த பிறகு வாழ்க்கையை ரசிப்பேன்."

"அந்த இடத்தை அடைந்த பிறகு நான் வெற்றி பெற்றவன்."

**அதனால் இன்று முதல் ஒரு சிறிய மாற்றத்தைத் தொடங்குவோம்.**

- ☑ பெரிய உறுதிமொழி வேண்டாம்.
- ☑ ஒரே ஒரு நல்ல பழக்கம்.
- ☑ ஒரே ஒரு புதிய முயற்சி.
- ☑ ஒரே ஒரு தவறைத் திருத்துவது.
- ☑ ஒரே ஒரு பயத்தை எதிர்கொள்வது.
- ☑ ஒரே ஒரு படி.
- ☑ அந்த ஒரு படிதான் நாளைய பாதையை உருவாக்கும்.

வெற்றியைத் தேடாதே... உன்னைத் தேடு.

உன்னை வளர்த்து.

உன்னை நம்பு.

உன்னை மாற்று.



வெற்றி... அதன் பிறகு உன்னைத் தேடி வருவதற்கான வாய்ப்பு அதிகம்.

– தொடர்ந்து பயணிப்போம்



"நேற்றைய உன்னை விட,
இன்றைய நீ ஒரு படி முன்னேறியிருந்தால்...
அதுவே வெற்றிப்பாதையில்
உன் முதல் வெற்றி."

பெண் கதவு... ஆண் பூட்டு..! – 24

# உறவு இனிக்க... இல்லறம் சிறக்க!



நல்லாசிரியர்
சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931

திருமணம் என்பது இரண்டு மனிதர்கள் ஒன்றாக வாழத் தொடங்குவது மட்டுமல்ல; இரண்டு வெவ்வேறு மனங்கள் ஒன்றையொன்று புரிந்து கொண்டு, வாழ்க்கையை இணைந்து நடத்தத் தொடங்கும் ஒரு புதிய பயணம்.

திருமணத்தின் ஆரம்ப நாட்களில் இருக்கும் அன்பும், ஆர்வமும், எதிர்பார்ப்பும் காலம் செல்லச் செல்ல வேறு ஒரு வடிவத்தைப் பெறுகின்றன. அப்போது கணவன்–மனைவி இருவருக்கும் இடையே அன்பைத் தாண்டி புரிதலும், நட்பும், பொறுமையும் தேவைப்படுகிறது.

திருமணத்தின் ஆரம்ப நாட்களில் இருக்கும் அன்பும், ஆர்வமும், எதிர்பார்ப்பும் காலம் செல்லச் செல்ல வேறு ஒரு வடிவத்தைப் பெறுகின்றன. அப்போது கணவன்–மனைவி இருவருக்கும் இடையே அன்பைத் தாண்டி புரிதலும், நட்பும், பொறுமையும் தேவைப்படுகிறது.



ஒருவரை ஒருவர் விரும்புவது எளிது. ஆனால் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது அவ்வளவு எளிதானதல்ல. ஒவ்வொருவருக்கும் தனித்தனி பழக்கங்கள் இருக்கும். விருப்பங்கள் மாறுபடும். எண்ணங்கள் வேறுபடும். வாழ்க்கையைப் பற்றிய பார்வையும் வேறுபடலாம். இப்படிப்பட்ட இரண்டு மனிதர்கள் ஒரே வீட்டில், ஒரே வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளும்போது சிறிய கருத்து வேறுபாடுகள் வருவது இயல்புதான்.

அதற்காக ஒவ்வொரு வேறுபாட்டையும் பிரச்சினையாக மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை.சில நேரங்களில் நாம் எதிர்பார்ப்பது நடக்கவில்லை என்பதற்காக கோபப்படுகிறோம். ஆனால் நம்மைப் போலவே எதிரில் இருப்பவருக்கும் எதிர்பார்ப்புகள் இருக்கின்றன என்பதை மறந்து விடுகிறோம்.

இல்லற வாழ்க்கையின் அழகு,"எனக்கு என்ன கிடைக்கிறது?"என்பதில் இல்லை.

"நான் என்ன கொடுக்கிறேன்?" என்பதில்தான் இருக்கிறது.

கணவன்– மனைவி இருவரும் தங்கள் வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் அளிக்கும் சிறிய அக்கறைகள்தான் நாளடைவில் பெரிய அன்பாக மாறுகின்றன.

காலையில் எழுந்தவுடன் ஒரு வார்த்தை பேசுவது, வேலைக்குச் செல்லும் முன் கவனமாகச் செல்லச் சொல்வது, வீட்டிற்கு வரத் தாமதமானால் அழைத்துக் கேட்பது, உடல்நிலை சரியில்லாதபோது அருகில் இருப்பது... இவை பார்ப்பதற்கு சாதாரணமான விஷயங்கள் தான்.

ஆனால் குடும்ப வாழ்க்கையை அழகாக்குவது இப்படிப்பட்ட சாதாரணமான விஷயங்கள்தான்.

அன்பு என்பது எப்போதும் பெரிய வார்த்தைகளில் வெளிப்பட வேண்டியதில்லை.



சில நேரங்களில் ஒரு பார்வை போதும்.
சில நேரங்களில் ஒரு சிறிய புன்னகை போதும்.
சில நேரங்களில் எதுவும் பேசாமல் அருகில் அமர்ந்திருப்பதே போதும்.

ஒருவர் மனதில் என்ன இருக்கிறது என்பதை மற்றவர் புரிந்துகொள்ள முயற்சி செய்வது அன்பின் உயர்ந்த வடிவம். இன்றைய வாழ்க்கையில் கணவன்–மனைவி இருவருமே தங்களுடைய வேலை, குடும்பப் பொறுப்பு, குழந்தைகள், பொருளாதாரச் சுமை என பலவற்றைச் சுமந்து கொண்டிருக்கிறார்கள். வெளியுலக அழுத்தம் வீட்டிற்குள் வராமல் இருப்பது எப்போதும் சாத்தியமில்லை.

வேலையில் ஏற்பட்ட கோபம் வீட்டில் வெளிப்படலாம்.
பணப்பிரச்சினை மன அழுத்தத்தை ஏற்படுத்தலாம்.
குழந்தைகளின் எதிர்காலம் குறித்த கவலை இருக்கலாம்.
உறவினர்களால் ஏற்படும் பிரச்சினைகளும் இருக்கலாம்.

அந்த நேரங்களில் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் எதிரியாக மாறிவிடாமல் இருப்பது மிகவும் முக்கியம்.

பிரச்சினை நமக்கு எதிராக இருக்கலாம்; ஆனால் நாம் ஒருவருக்கொருவர் எதிராக இருக்க வேண்டியதில்லை.

இந்த ஒரு புரிதல் பல குடும்பப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடியது.

கணவன்–மனைவி உறவில் இன்னொரு முக்கியமான விஷயம் நட்பு.

கணவன் என்பதைக் கடந்து மனைவிக்கு ஒரு நல்ல நண்பனாக இருக்க வேண்டும். மனைவி என்பதைக் கடந்து கணவனுக்கு ஒரு நல்ல நண்பியாக இருக்க வேண்டும்.

நண்பர்களிடம் நாம் பல விஷயங்களைத் தயக்கமின்றிப் பேசுகிறோம். நம்முடைய சந்தோஷத்தையும் பகிர்கிறோம். கவலையையும் பகிர்கிறோம். சில நேரங்களில் நம்முடைய தவறுகளைக்கூட ஒப்புக்கொள்கிறோம். அதே நம்பிக்கையும் சுதந்திரமும் கணவன் –மனைவிக்குள் இருந்தால் இல்லற வாழ்க்கை இன்னும் இனிமையாகும்.



"நான் சொல்வதுதான் சரி" என்ற எண்ணம் இருவரிடமும் இருந்தால் வாழ்க்கை ஒரு போட்டியாக மாறிவிடும்.

"நாம் இருவரும் சேர்ந்து சரியான முடிவை எடுக்க வேண்டும்" என்ற எண்ணம் இருந்தால் அதே வாழ்க்கை ஒரு பயணமாக மாறிவிடும்.

குடும்பத்தில் முடிவெடுக்கும் போது ஒருவருடைய கருத்தை மற்றவர் கேட்பது மிகவும் அவசியம்.

எல்லா நேரங்களிலும் ஒருவருடைய கருத்துதான் சரியாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

சில நேரங்களில் கணவன் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.
சில நேரங்களில் மனைவி விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.
அது யார் வெற்றி, யார் தோல்வி என்பதல்ல.
உறவு வெற்றி பெறுகிறதா என்பதுதான் முக்கியம்.
இல்லற வாழ்க்கையில் இன்னொரு பெரிய குணம் மன்னிப்பு.

எந்தக் குடும்பத்திலும் தவறுகள் இல்லாமல் இருக்காது.கோபத்தில் பேசப்பட்ட ஒரு வார்த்தை இருக்கலாம். கவனக்குறைவால் நடந்த ஒரு செயல் இருக்கலாம். எதிர்பார்த்தபடி நடக்காத ஒரு முடிவு இருக்கலாம்.

அவற்றை எல்லாம் மனதில் சேமித்து வைத்துக் கொண்டு வாழ்ந்தால், பழைய சம்பவங்கள் ஒவ்வொரு நாளும் புதிய பிரச்சினைகளாக மாறிக்கொண்டே இருக்கும்.

மன்னிப்பது என்பது நடந்த தவறை சரி என்று ஏற்றுக்கொள்வது அல்ல.

அந்தத் தவறை மீண்டும் மீண்டும் நினைத்து நம்முடைய மன அமைதியை இழக்காமல் இருப்பது. ஒருவர் உண்மையாக வருந்தும் போது அவருக்கு இன்னொரு வாய்ப்பு கொடுப்பதும் இல்லறத்தின் அழகான பண்புகளில் ஒன்று.

அதே நேரத்தில், மன்னிப்பு என்பது தவறுகளை தொடர்ந்து செய்வதற்கான அனுமதியும் அல்ல. புரிதலும், மாற்றமும், பொறுப்பும் அதனுடன் இருக்க வேண்டும்.



குடும்ப வாழ்க்கையில் சில விஷயங்களைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் விட்டுவிடத் தெரிந்திருக்க வேண்டும்.

ஒரு சிறிய தவறுக்காக ஒரு நாள் முழுவதும் பேசாமல் இருப்பது...
ஒரு வார்த்தைக்காக பல நாட்கள் கோபமாக இருப்பது...
பழைய விஷயங்களை மீண்டும் மீண்டும் எடுத்துப் பேசுவது...
இவை எதுவும் உறவை வளர்க்காது.

மாறாக, மனதில் இருக்கும் இடைவெளியை இன்னும் பெரிதாக்கும். வாழ்க்கை மிகவும் குறுகியது.நாம் இன்று கோபமாக இருக்கும் விஷயம் சில ஆண்டுகளுக்குப் பிறகு நினைத்துப் பார்த்தால், "இதற்காகவா இவ்வளவு கோபப்பட்டோம்?" என்று நாமே நினைக்கக்கூடும்.

அதனால், எல்லா விஷயங்களையும் வெற்றி–தோல்வி என்ற அளவில் பார்க்காமல், சிலவற்றை விட்டுக் கொடுத்து கடந்து செல்லத் தெரிந்திருக்க வேண்டும்.

இல்லற வாழ்க்கை என்பது இரண்டு பேருடைய வாழ்க்கை மட்டுமல்ல. அவர்களுடன் குழந்தைகளின் எதிர்காலமும் இணைந்திருக்கிறது.

வீட்டில் கணவன்–மனைவி ஒருவரை ஒருவர் மதித்து பேசும்போது, குழந்தைகளும் அதையே கற்றுக்கொள்கிறார்கள். பெற்றோர் ஒருவருக்கொருவர் உதவி செய்வதைப் பார்க்கும் குழந்தைகள், உறவின் மதிப்பை இயல்பாகவே கற்றுக்கொள்கிறார்கள்.

அதனால், நாம் குழந்தைகளுக்காக பெரிய பெரிய அறிவுரைகளைச் சொல்ல வேண்டியதில்லை.

நாம் எப்படி வாழ்கிறோம் என்பதே அவர்களுக்கு மிகப்பெரிய பாடமாகிவிடுகிறது.
ஒரு நல்ல குடும்பத்திற்கு பெரிய வீடு தேவையில்லை.
அதிக பணம் தேவையில்லை.
விலை உயர்ந்த பொருட்களும் தேவையில்லை.

அந்த வீட்டிற்குள் ஒருவரை ஒருவர் மதிக்கும் மனம் இருந்தால் போதும்.

ஒருவருடைய கஷ்டத்தை மற்றவர் புரிந்துகொள்ளும் மனம் இருந்தால் போதும்.வெற்றியில் மட்டுமல்ல, தோல்வியிலும் துணையாக நிற்கும் மனம் இருந்தால் போதும்.

"நான் இருக்கிறேன்... கவலைப்படாதே" என்று சொல்லக்கூடிய ஒருவர் வாழ்க்கையில் இருப்பது மிகப்பெரிய வரம்.

அதேபோல், அந்த வார்த்தையை நாமும் நம் துணைக்கு சொல்லத் தயாராக இருக்க வேண்டும். கணவன்–மனைவி இருவரும் வாழ்க்கையின் ஒரே பாதையில் நடப்பவர்கள்.

சில நேரங்களில் ஒருவர் வேகமாக நடக்கலாம்.
மற்றொருவர் சற்று பின்தங்கலாம்.
அப்போது முன்னால் சென்றவர் திரும்பிப் பார்த்து காத்திருக்க வேண்டும்.
பின்தங்கியவர் மீண்டும் வந்து சேர முயற்சி செய்ய வேண்டும்.
அதுதான் இணைந்து நடப்பது.
இல்லறம் என்பது யார் யாரை வென்றார்கள் என்பதற்கான இடமல்ல.

இருவரும் சேர்ந்து வாழ்க்கையை வெல்வதற்கான இடம்.

திருமண வாழ்க்கை எப்போதும் மகிழ்ச்சியாக மட்டுமே இருக்கும் என்று யாராலும் உறுதி கூற முடியாது. சோதனைகள் வரும். கருத்து வேறுபாடுகள் வரும். பொருளாதாரப் பிரச்சினைகள் வரும். உடல்நலம், குழந்தைகள், வேலை, உறவுகள் என பல்வேறு காரணங்களால் மன அழுத்தங்களும் வரலாம்.

ஆனால் அந்த எல்லாவற்றையும் கடந்து செல்லும்போது,
"நாம் இருவரும் ஒன்றாக இருக்கிறோம்" என்ற நம்பிக்கை மட்டும் குறையாமல் இருந்தால், எந்தச் சோதனையையும் எதிர்கொள்ள முடியும்.

அன்பு மட்டும் இல்லறத்தை நடத்தாது.
அன்புடன் புரிதல் வேண்டும்.
புரிதலுடன் அக்கறை வேண்டும்.
அக்கறையுடன் நட்பு வேண்டும்.
தவறு ஏற்பட்டால் மன்னிக்கும் மனம் வேண்டும்.
சில நேரங்களில் விட்டுக் கொடுக்க வேண்டும்.
சில நேரங்களில் பேசாமல் கேட்க வேண்டும்.
சில நேரங்களில் பேச வேண்டியதைப் பேச வேண்டும்.



இவை அனைத்தும் சேர்ந்தால் தான் இல்லறம் ஒரு இனிய பயணமாக மாறும்.

கடைசியாக ஒரு விஷயம்...
"நீயா? நானா?" என்று தொடங்கும் குடும்ப வாழ்க்கை, ஒருநாள் "நாம்தான்" என்று மாற வேண்டும்.

ஏனென்றால் இல்லறத்தில் உண்மையான வெற்றி என்பது ஒருவர் மற்றவரை வெல்வது அல்ல.

இருவரும் சேர்ந்து வாழ்க்கையை வெல்வதுதான்.

அன்புடன் தொடங்கிய உறவு, புரிதலுடன் வளர்ந்து, நட்புடன் வலுப்பெற்று, மன்னிப்புடன் நீடித்தால்...

அந்த வீடு வெறும் வீடாக இருக்காது.

அது ஒரு குடும்பமாகும்.
அந்த குடும்பம் ஒரு அழகான உலகமாகும்.

– தொடரும்

ஆச்சீஸ் கிச்சன்



# சத்தும் சுவையும் தரும் வரகரிசி கஞ்சி

காலை உணவு எப்போதும் சுவையாகவும், வயிற்றை நிறைவாக வைத்திருக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதே நேரத்தில், அன்றைய நாளை சுறுசுறுப்பாகத் தொடங்க உதவும் உணவாகவும் இருக்க வேண்டும்.

சிறுதானியங்களை நமது அன்றாட உணவில் சேர்த்துக் கொள்வது நல்ல பழக்கமாகும். அந்த வகையில், வரகரிசியுடன் கேரட், பீன்ஸ் போன்ற காய்கறிகளைச் சேர்த்து தயாரிக்கப்படும் இந்தக் கஞ்சி, எளிமையாகச் செய்யக்கூடிய ஒரு காலை உணவாக அமையும்.

குறிப்பாக, ஓட்ஸ் போன்ற ஒரே மாதிரியான காலை உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட விரும்பாதவர்களுக்கு, சிறுதானியத்தில் ஒரு மாற்றத்தை முயற்சி செய்யலாம். காய்கறிகளும் சேர்வதால் சுவையும் கூடுகிறது.

இந்த எளிய வரகரிசி கஞ்சியை உங்கள் இல்லத்திலும் செய்து பாருங்கள்... சுவைத்து, உங்கள் அனுபவத்தை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்!

## தேவையான பொருட்கள் :

- வரகரிசி – 1 கப்
- எண்ணெய் – 3 டீஸ்பூன்
- சீரகம் – 1/2 டீஸ்பூன்
- இஞ்சி – 1 ஸ்பூன் (துருவியது)
- பூண்டு – 10 பல் (பொடியாக நறுக்கியது)
- பச்சை மிளகாய் – 1 (கீறியது)
- கறிவேப்பிலை – 1 கொத்து
- வெங்காயம் – 1 (பொடியாக நறுக்கியது)
- பீன்ஸ் – 1/2 கப் (பொடியாக நறுக்கியது)
- கேரட் – 1/2 கப் (பொடியாக நறுக்கியது)
- உப்பு – சுவைக்கேற்ப
- தண்ணீர் – தேவையான அளவு
- மிளகுத் தூள் – 1 டீஸ்பூன்
- கொத்தமல்லி – சிறிது

## செய்முறை :

- முதலில் ஒரு பாத்திரத்தில் வரகரிசியை எடுத்துக் கொண்டு, நீரில் 3 முறை கழுவிக் கொள்ள வேண்டும்.
- பின் அதில் நீரை ஊற்றி 20 நிமிடம் ஊற வைத்துக் கொள்ள வேண்டும்.
- பின்னர் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி சூடானதும், சீரகம் சேர்த்து தாளிக்க வேண்டும்.
- அதன் பின் அதில் துருவிய இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய், கறிவேப்பிலை சேர்த்து நன்கு வதக்க வேண்டும்.
- பின்பு அதில் பொடியாக நறுக்கிய வெங்காயத்தை சேர்த்து கண்ணாடி பதத்திற்கு வரும் வரை வதக்க வேண்டும்.

- பிறகு அதில் பொடியாக நறுக்கிய கேரட், பீன்ஸ் சேர்த்து, சுவைக்கேற்ப உப்பு தூவி 2–3 நிமிடம் வதக்கி விட்டு வேக வைக்க வேண்டும்.
- அடுத்து அதில் கஞ்சிக்கு தேவையான அளவு நீரை ஊற்றி கொதிக்க ஆரம்பித்ததும், வரகரிசியை நீரை வடிகட்டிவிட்டு சேர்த்து கிளறி, மூடி வைத்து மிதமான தீயில் வைத்து 3–5 நிமிடம் வேக வேக்க வேண்டும்.
- பின் மூடியைத் திறந்து கஞ்சியை கிளறி, மிளகுத் தூள் மற்றும் கொத்தமல்லியைத் தூவி கிளறி இறக்கினால், சுவையான வரகரிசி கஞ்சி தயார்.

குடும்பத்தில் பெரியவர்கள் மட்டுமல்லாமல், குழந்தைகளுக்கும் ஏற்றவாறு வீட்டில் செய்து பார்த்து, அவர்களின் விருப்பத்திற்கேற்ப பரிமாறலாம்.

## ஆச்சீஸ் கிச்சன் சமையலறைக் குறிப்பு

- சிறுதானியம் என்றாலே சுவை குறைவாக இருக்கும் என்ற எண்ணம் தேவையில்லை. சரியான காய்கறிகள் மற்றும் வாசனைப் பொருட்களுடன் சேர்த்து தயாரித்தால், எளிய உணவுகளும் சுவையானதாக மாறிவிடும்.
- உடல் எடை குறைப்பு அல்லது குறிப்பிட்ட உடல்நல நோக்கங்களுக்காக உணவைத் தேர்வு செய்பவர்கள், தங்களுடைய தனிப்பட்ட உடல்நிலைக்கேற்ப மருத்துவர் அல்லது உணவியல் நிபுணரின் ஆலோசனையைப் பெறுவது சிறந்தது.

**சுவையான உணவு என்பது பெரிய சமையல் மட்டுமல்ல...
அன்புடன் தயாரிக்கப்படும் எளிய உணவும் குடும்பத்தின் நினைவாக மாறும்!**

கட்டுரையாக்கம்:
உமாராணி சொக்கலிங்கம்.
நற்சாந்துபட்டி ஈரோடு.



# முயற்சியே புதுப்பாதை..

பாதைகள் இல்லா
பயணங்கள் கடிது
பகுத்தாய்ந்து செல்லும்
பக்குவம் எளிது

விதைக்குள் புதைந்து
இருக்கும் விருட்சம்
வெளிச்சம் கண்டு
வீறிட்டு எழும்

முட்டி முளைத்து
வளரும் வேகம்
முயற்சி ஒன்றே
தளிரின் மோகம்

பதியும் கால்தடங்கள்
புதுப்பாதை வகுக்கும்
விதியும் விக்கித்து
விலகி ஓடும்

தழற்சி இல்லா
முயற்சி நன்றே
அழற்சி அகன்றால்
அகிலம் நமதே

முயற்சியை நாம்
கையில் எடுப்போம்!
முடிவை ஆண்டவன்
கையில் விடுப்போம்!





–அரு.சிவகாமி இராமனாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை

# பங்கு சந்தை

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர்கள் கார்த்திக் முத்தப்பன் (கண்டனூர்) மற்றும் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தை பற்றிய விரிவான பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் அறியலாம்.

## இந்த இதழில் ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.

கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) நகரத்தார் கேப்பிட்டல் – சென்னை

MAYUR UNIQUOTERS LTD

**MAYUR UNIQUOTERS LIMITED (522249/MAYURUNIQ)**

செயற்கைத் தோல் (artificial leather) தயாரிப்புகளுக்கான மிகவும் முன்னுரிமை அளிக்கப்பட்ட விநியோகஸ்தராகத் திகழ வேண்டும் என்ற நோக்கத்துடனேயே 1994–ஆம் ஆண்டில் 'மயூரி யூனிக்வோட்டர்ஸ் லிமிடெட்' (Mayur Uniquoters Limited) நிறுவனம் தொடங்கப்பட்டது.அப்போதிருந்து, நிறுவனம் தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் பயணித்து, ஒவ்வொரு ஆண்டும் அபரிமிதமான மற்றும் முழுமையான வளர்ச்சியைப் பதிவு செய்து வருகிறது. இதன் விளைவாக, 2023–ஆம் ஆண்டில் ஆசிய–பசிபிக் பிராந்தியத்தில் உள்ள '1 பில்லியன் டாலருக்கும் குறைவான வருவாய் கொண்ட சிறந்த 200 நிறுவனங்களின்' (Forbes Asia Top 200 under $1Bn enterprises) பட்டியலில் மீண்டும் இடம்பெறும் சிறப்பைப் பெற்றது.

இந்நிறுவனம், இந்தியாவில் 'ரிலீஸ் பேப்பர் டிரான்ஸ்ஃபர் கோட்டிங் டெக்னாலஜி'யைப் ('Release Paper Transfer Coating Technology') பயன்படுத்தி செயற்கைத் தோலை உற்பத்தி செய்யும் மிகப்பெரிய நிறுவனமாகும். கடந்த மூன்று தசாப்தங்களாக, இந்நிறுவனம் மாதத்திற்கு 0.25 மில்லியன் நேரியல் மீட்டர் என்ற சொற்ப உற்பத்தியிலிருந்து, 7 PVC பூச்சுக் கோடுகள் மூலம் மாதத்திற்கு 3.5 மில்லியன் நேரியல் மீட்டர் என்ற வியக்கத்தக்க உற்பத்திக்கு நீண்ட தூரம் பயணித்துள்ளது. மேலும், இந்நிறுவனம் மொரேனாவில் உள்ள தனது PU பூச்சு ஆலையில், ஆண்டுக்கு 5 மில்லியன் நேரியல் மீட்டர் என்ற ஆரம்பத் திறனுடன் செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளது, இது ஆண்டுக்கு 20 மில்லியன் நேரியல் மீட்டர் வரை விரிவாக்கப்படக்கூடியது.

தங்களின் 'பின்தங்கிய ஒருங்கிணைப்பு' (backward integration) நடவடிக்கையின் ஒரு பகுதியாக, தோத்ஸார் (Dhodhsar) ஆலையில் மாதம் 2.25 மில்லியன் லீனியர் மீட்டர்

உற்பத்தித் திறன் கொண்ட ஜவுளி பின்னல் பிரிவு (textile knitting unit) அமைக்கப்பட்டுள்ளது.

'முன்னோக்கிய ஒருங்கிணைப்பு' (forward integration) அடிப்படையில், துளை இடுதல் (perforation) பணிக்காக ஆண்டுக்கு 1.28 மில்லியன் லீனியர் மீட்டர் மற்றும் ஃபோம் லேமினேஷன் (foam lamination) பணிக்காக ஆண்டுக்கு 2.4 மில்லியன் லீனியர் மீட்டர் உற்பத்தித் திறனை இந்நிறுவனம் எட்டியுள்ளது. இது விநியோகச் சங்கிலியைச் சுருக்குவதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு விரைவான மற்றும் திறமையான சேவையை வழங்க உதவுகிறது.

மயூரி யூனிகோட்டர்ஸ், இந்தியாவின் முன்னணி ஒழுங்கமைக்கப்பட்ட செயற்கைத் தோல் மற்றும் பூச்சு செய்யப்பட்ட ஜவுளித் துணி உற்பத்தியாளர்களில் ஒன்றாகும். இது வாகன OEM–கள், காலணிகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் மற்றும் பிற பயன்பாடுகளுக்குத் தனது தயாரிப்புகளை வழங்குகிறது.

நிறுவனத்தின் உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பானது, அவர்களின் பின்னல், பதப்படுத்துதல், வெப்ப நிலைப்படுத்தல், பூச்சு, புடைப்பு வேலைப்பாடு, அச்சிடுதல், அரக்கு பூசுதல், மென்தோல் மென்மையாக்குதல், உருட்டுதல் மற்றும் லேமினேட்டிங் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான முழு அளவிலான இயந்திரங்களைக் கொண்டுள்ளது. நிறுவனம் தரம் மற்றும் புதுமைக்கு மதிப்பளிக்கிறது, எனவே, அவர்களின் இயற்பியல், வேதியியல் மற்றும் தயாரிப்பு மேம்பாட்டு ஆய்வகங்கள், பல்வேறு பிரிவுகள் மற்றும் பயன்பாடுகளுக்கான செயற்கைத் தோலின் ஏறக்குறைய அனைத்துப் பண்புகளையும் சோதிக்கும் திறன் கொண்டவையாக உள்ளன.

மேலும், இந்நிறுவனம் 2020 முதல் ஐக்கிய நாடுகள் உலகளாவிய ஒப்பந்தத்தில் (United Nations Global Compact) பெருமைமிக்க உறுப்பினராக உள்ளது. இது, நிறுவனத்திற்குள்ளும் அதன் விநியோகச் சங்கிலி முழுவதிலும் நிலையான நடைமுறைகளுக்கான அவர்களின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

இந்நிறுவனம் ISO 9001 (தர மேலாண்மை அமைப்பு), ISO 14001 (சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு), IATF 16949 (வாகனத் துறைக்கான தர மேலாண்மை அமைப்பு), ISO 45001 (தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மேலாண்மை அமைப்பு) மற்றும் ISO 27001 & TISAX (தகவல் பாதுகாப்பு மேலாண்மை அமைப்பு) ஆகிய சான்றிதழ்களைப் பெற்றுள்ளது. மேலும், செயல்முறை மற்றும் தயாரிப்பு தணிக்கைகளுக்கு VDA 6.3 மற்றும் VDA 6.5 வழிமுறைகளையும் இது பின்பற்றுகிறது; முறையான அமைப்புகளைச் திறம்படச் செயல்படுத்துதல் மற்றும் அனைத்துச் செயல்முறைகளிலும் தொடர்ச்சியான மேம்பாட்டை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் செயற்கைத் தோலை (artificial leather) வடிவமைத்து உற்பத்தி செய்வதில் இந்நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை இவை வெளிப்படுத்துகின்றன.

முன்னதாக, மயூர் முதன்மையாக ஒரு உள்நாட்டு செயற்கைத் தோல் உற்பத்தியாளராகக் கருதப்பட்டது. இன்று, அதன் வேகமாக விரிவடைந்து வரும் ஏற்றுமதி வாகன OEM வணிகமே இக்கதையின் மிகவும் சுவாரஸ்யமான பகுதியாகும்.

**இந்நிறுவனம் உலகளாவிய வாகன உற்பத்தியாளர்களுக்கு அதிகளவில் பொருட்களை வழங்கி வருகிறது, மேலும் பின்வரும் நன்மைகளைப் பெறுகிறது:**

அதிகரித்து வரும் ஏற்றுமதி OEM அளவுகள்

அங்கீகரிக்கப்பட்ட வாகனத் தளங்களின் எண்ணிக்கை அதிகரித்தல்

அதிக மதிப்புள்ள தயாரிப்புகள்

சிறந்த ஏற்றுமதி வருவாய்

சாதகமான ஏற்றுமதி/உள்நாட்டு கலவை

செயல்பாட்டு நெம்புகோல்

திறன் விரிவாக்கம்

உலகளாவிய உற்பத்தி விரிவாக்கத்திற்கான சாத்தியக்கூறுகள்

மயூர், பொதுவாக செயற்கைத் தோல் என்று அழைக்கப்படும் PVC–பூசப்பட்ட மற்றும் PU–பூசப்பட்ட துணிகளை உற்பத்தி செய்கிறது.

**இந்நிறுவனம் 400–க்கும் மேற்பட்ட செயற்கைத் தோல் வகைகளைக் கொண்டுள்ளது. இதன் தயாரிப்புகள் பின்வருவனவற்றில் பயன்படுத்தப்படுகின்றன:**

**வாகனம்**

கார் இருக்கைகள்

கதவு அலங்காரங்கள்

ஸ்டீயரிங்–வீல் கவர்கள்

கியர்–ஷிஃப்ட் பாகங்கள்

கூரை உறை

சூரிய தடுப்பான்கள்

உட்புற அலங்காரங்கள்

**காலணிகள்**

காலணி மேல்பாகங்கள்

காலணி உள்வரி

உள்ளடிகள்

விளையாட்டுக் காலணிகள்

முறைசார் காலணிகள்

செருப்புகள்

ஸ்லிப்பர்கள்

**அலங்காரப் பொருட்கள்**

சோஃபாக்கள்

அலங்காரப் பொருட்களின் மெத்தைவேலை

உட்புறப் பயன்பாடுகள்

அலங்காரப் பொருட்கள்

**ஃபேஷன் மற்றும் தோல் பொருட்கள்**

பைகள்

ஆடைகள்

துணைப் பொருட்கள்

**பிற வாழ்க்கைமுறைப் பொருட்கள்**

நிறுவனத்தின் வணிகம், PU/PVC செயற்கைத் தோல் உற்பத்தி மற்றும் விற்பனையை உள்ளடக்கிய ஒரே பிரிவாகக் குறிப்பிடப்படுகிறது.

இதுவே மயூரின் கதையில் மிக முக்கியமான பகுதி என்று வாதிடலாம்.

2026 நிதியாண்டில் ஏற்றுமதி வருவாய் வணிகத்தின் சுமார் 42.5% ஆக இருந்தது என்றும், குறுகிய காலத்தில் ஏற்றுமதியின் பங்களிப்பு சுமார் 40–45% ஆக இருக்கும் என்றும் நிர்வாகம் கூறியது; இதில் வாகன ஏற்றுமதி ஒரு முக்கிய வளர்ச்சி உந்துதலாக இருக்கும்.

மிக முக்கியமாக, 2026 நிதியாண்டில் ஏற்றுமதி மதிப்பு வளர்ச்சி சுமார் 35.5% ஆக இருந்தது, ஆனால் உள்நாட்டு மதிப்பு வளர்ச்சி சுமார் 4%+ மட்டுமே இருந்தது.

மொத்த அளவு வளர்ச்சி சுமார் 5% ஆகவும், மதிப்பு வளர்ச்சி சுமார் 15% ஆகவும் இருந்தது.

அந்த வேறுபாடு மிகவும் முக்கியமானது.

இதன் பொருள், மயூர் வெறுமனே அதிக மீட்டர்களை விற்கவில்லை.

அது சிறந்த வருவாய் ஈட்டும் வகையில், பலதரப்பட்ட பொருட்களை சிறந்த கலவையில் விற்கிறது.

உள்நாட்டு விலைகளை விட ஏற்றுமதி விலைகள் கணிசமாக சிறப்பாக இருப்பதாகவும், ஏற்றுமதி வணிகம் லாப வரம்புகளுக்கு வலுவாகப் பங்களிப்பதாகவும் நிர்வாகம் குறிப்பாக எடுத்துரைத்தது.

மயூர் ஏற்கனவே முக்கிய வாகன நிறுவனங்களுக்குப் பொருட்களை வழங்குகிறது/அவர்களுடன் உறவுகளைக் கொண்டுள்ளது.

**அதன் வெளிப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சூழலில் பின்வரும் பெயர்கள் அடங்கும்:**

ஃபோர்டு
மெர்சிடிஸ்–பென்ஸ்
பிஎம்டபிள்யூ
வோக்ஸ்வாகன்
டொயோட்டா
கியா
ஹூண்டாய்
நிசான்
டாடா மோட்டார்ஸ்
மஹிந்திரா
மாருதி சுசுகி

இந்நிறுவனம் தனது ஏற்றுமதி OEM வணிகத்தை விரிவுபடுத்துவதில் குறிப்பாக வெற்றி கண்டுள்ளது.

ஒரு சுவாரஸ்யமான முன்னேற்றம் ஃபோர்டு ஆகும்.

வரலாற்று ரீதியாக மயூரின் ஃபோர்டு வணிகம் ஒப்பீட்டளவில் சிறியதாகவே இருந்தது, ஆனால் நிறுவனம் மேலும் பல தளங்களைச் சேர்த்துள்ளது மற்றும் ஃபோர்டு விற்பனை அளவு மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்ப்பதாக நிர்வாகம் கூறியது.

இது முக்கியமானது, ஏனெனில் புதிய வாகன–தள ஒப்புதல்கள் ஒரு காலாண்டு ஆர்டர் வாய்ப்பாக இல்லாமல், பல ஆண்டு வருவாய் ஓட்டத்தை உருவாக்க முடியும்.

மயூர், ஏற்கனவே உள்ள ஒரு இந்திய ஆலையில் ஒரு புதிய பூச்சு உற்பத்தி வரிசைக்கு ஆர்டர் செய்துள்ளது.

நிர்வாகம் தெரிவித்ததாவது:

முதலீடு: சுமார் ₹50 கோடி
கூடுதல் உற்பத்தித் திறன்: மாதத்திற்கு சுமார் 5 லட்சம் மீட்டர்
சாத்தியமான வருவாய் அதிகரிப்பு: சுமார் ₹120–150 கோடி
எதிர்பார்க்கப்படும் நிறைவு: 2026 ஆம் ஆண்டின் இறுதி வாக்கில்

இது கவர்ச்சிகரமானது, ஏனெனில் நிறுவனம் உடனடியாக ஒரு புதிய ஆலையைக் கட்டாமலேயே கணிசமான வருவாயைச் சேர்க்க வாய்ப்புள்ளது.
மேலும், இதைவிட மிகப் பெரிய சாத்தியமான வாய்ப்பும் உள்ளது. நிர்வாகம், சுமார் ₹300 கோடி முதலீட்டில் ஒரு உலகளாவிய உற்பத்தித் தளத்தை மதிப்பீடு செய்து வருகிறது.

வட அமெரிக்க வாகன விநியோகச் சங்கிலிக்கு அருகாமையில் இருப்பதால் மெக்சிகோ முன்பு பரிசீலிக்கப்பட்டது, இருப்பினும், புவிசார் அரசியல் மற்றும் சுங்கவரி நிச்சயமற்ற தன்மைகளால் நேரம்/இடம் குறித்த முடிவு எடுக்கப்படாமல் இருந்தது.

இறுதியில் இது வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டால்,
இது வளர்ச்சியின் இரண்டாவது முக்கியத் தூணாக மாறக்கூடும்.

மயூரின் முக்கிய வணிகம் இன்னும் PVC செயற்கைத் தோலால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது.

PU வணிகம் இன்னும் அதன் முழுத் திறனை எட்டவில்லை.

PU விற்பனை ஒப்பீட்டளவில் மந்தமாகவே உள்ளது என்பதை நிர்வாகம் ஒப்புக்கொண்டது. 2026 நிதியாண்டில் PU வருவாய் சுமார் ₹27 கோடியாக மட்டுமே இருந்தது.

இருப்பினும், இந்நிறுவனம் பெரிய பிராண்டுகளுடன் இணைந்து செயல்பட்டு, வாடிக்கையாளர் ஒப்புதல்களையும் பெற்றுள்ளது.

PU குறிப்பிடத்தக்க அளவில் விரிவடையத் தொடங்கினால், அது பின்வருவனவற்றை வழங்கக்கூடும்:

தயாரிப்புப் பன்முகப்படுத்தல்
அதிக மதிப்புள்ள பயன்பாடுகள்
சிறந்த வாடிக்கையாளர் ஊடுருவல்
கூடுதல் வருவாய் வளர்ச்சி

## அடிப்படைப் பார்வை:

இம்மூல நிறுவனம் 47.67 என்ற ஒருங்கிணைந்த ஒரு பங்குக்கான வருவாயையும் (EPS – கடந்த 12 மாதங்களுக்கு, 2026-06 வரை), 15.27 என்ற ஒருங்கிணைந்த PE விகிதத்தையும் கொண்டுள்ளது (இத்துறையின் PE விகிதம் 20.38 ஆக உள்ளது).

சமீபத்திய தரவுகளின்படி, நிறுவனத்தின் புரமோட்டர்கள் (Promoters) 58.77% பங்குகளைக் கொண்டுள்ளனர்.

இந்நிறுவனம் ஏறக்குறைய கடன் இல்லாத நிலையில் உள்ளது.

## நிறுவனத்தின் அடிப்படை விவரங்கள்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Previous Close | 731.80 | 52 Wk High | 906.35 | TTQ | 2287 | EPS (TTM) (Standalone / Consolidated) | 50.79/47.67 | Category | Listed |
| Open | 726.80 | 52 Wk Low | 471.80 | Turnover (Lakh) | 16.68 | CEPS (TTM) (Standalone / Consolidated) | 57.58/54.49 | Group / Settlement Type | B / T+1 |
| High | 736.25 | Upper Price Band | 878.15 | 2W Avg Qty | 5,113.00 | PE (Standalone / Consolidated) | 14.33/15.27 | Index | BSE 1000 |
| Low | 726.25 | Lower Price Band | 585.45 | Mcap Full (Cr.) | 3,162.91 | ROE / PB | 25.04/3.59 | Basic Industry | Leather And Leather Products |
| VWAP | 729.20 | Price Band | 20% | Mcap FF (Cr.) | 1,264.09 | Face Value | 5.00 | | |

# நிதிச் செயல்பாடு:

| (in Cr.) | Jun-26 | Mar-26 | Dec-25 | Sep-25 | Jun-25 | FY 25-26 |
|---|---|---|---|---|---|---|
| Income Statement | | | | | | |
| Revenue | 247.03 | 260.55 | 236.99 | 237.76 | 206.41 | 941.71 |
| Other Income | 22.68 | 3.03 | 19.28 | 12.77 | 19.41 | 54.48 |
| Total Income | 269.71 | 263.58 | 256.27 | 250.53 | 225.82 | 996.19 |
| Expenditure | -184.43 | -173.70 | -178.81 | -178.55 | -163.29 | -694.34 |
| Interest | -0.22 | -0.41 | -0.23 | -0.29 | -0.30 | -1.23 |
| PBDT | 85.28 | 89.88 | 77.46 | 71.98 | 62.53 | 301.85 |
| Depreciation | -7.49 | -7.29 | -7.37 | -7.35 | -7.21 | -29.22 |
| PBT | 77.79 | 82.59 | 70.09 | 64.63 | 55.32 | 272.62 |
| Tax | -18.84 | -21.88 | -17.15 | -16.53 | -14.09 | -69.65 |
| Net Profit | 58.95 | 60.71 | 52.94 | 48.10 | 41.23 | 202.97 |
| Equity | 21.73 | 21.73 | 21.73 | 21.73 | 21.73 | 21.73 |
| EPS | 13.57 | 13.97 | 12.18 | 11.07 | 9.49 | 46.71 |
| CEPS | 15.29 | 15.65 | 13.88 | 12.76 | 11.15 | [illegible].44 |
| OPM % | 34.61 | 34.66 | 32.78 | 30.39 | 30.43 | [illegible].18 |
| NPM % | 23.86 | 23.30 | 22.34 | 20.23 | 19.97 | 21.55 |
| | Standalone | Standalone | Standalone | Standalone | Standalone | Standalone |

# நிறுவனத்தின் நிதி நிலை:

**Income (P&L)** | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

| QUARTERLY \| ANNUAL | JUN 2026 | MAR 2026 | DEC 2025 | SEPT 2025 | JUN 2025 |
|---|---|---|---|---|---|
| Total Income | 292.19 | 276.65 | 256.84 | 253.15 | 235.44 |
| Total Income Growth (%) | ↑ 5.62 | ↑ 7.71 | ↑ 1.46 | ↑ 7.52 | ↓ -10.18 |
| Total Expenses | 217.82 | 194.96 | 189.40 | 197.21 | 180.13 |
| Total Expenses Growth (%) | ↑ 11.72 | ↑ 2.94 | ↓ -3.96 | ↑ 9.48 | ↓ -12.02 |
| EBIT | 74.38 | 81.69 | 67.44 | 55.94 | 55.31 |
| EBIT Growth (%) | ↓ -8.95 | ↑ 21.13 | ↑ 20.56 | ↑ 1.14 | ↓ -3.61 |
| Profit after Tax (PAT) | 56.12 | 59.43 | 50.73 | 40.84 | 40.73 |
| PAT Growth (%) | ↓ -5.58 | ↑ 17.15 | ↑ 24.21 | ↑ 0.28 | ↓ -1.86 |
| EBIT Margin (%) | 25.45 | 29.53 | 26.26 | 22.10 | 23.49 |
| Net Profit Margin (%) | 19.21 | 21.48 | 19.75 | 16.13 | 17.30 |
| Basic EPS (₹) | 12.92 | 13.68 | 11.68 | 9.40 | 9.37 |

Income (P&L) | **Balance Sheet** | Cash Flow | Ratios — CONSOLIDATED

| ANNUAL | FY 2026 | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 1,261.95 | 1,054.64 | 962.86 | 871.04 | 821.93 |
| Total Assets Growth (%) | ↑ 19.66 | ↑ 9.53 | ↑ 10.54 | ↑ 5.97 | ↑ 8.64 |
| Total Liabilities | 129.45 | 99.07 | 95.76 | 117.42 | 114.78 |
| Total Liabilities Growth (%) | ↑ 30.66 | ↑ 3.46 | ↓ -18.44 | ↑ 2.30 | ↓ -13.92 |
| Total Equity | 1,132.50 | 955.57 | 867.10 | 753.62 | 707.16 |
| Total Equity Growth (%) | ↑ 18.52 | ↑ 10.20 | ↑ 15.06 | ↑ 6.57 | ↑ 13.47 |
| Current Ratio (x) | 7.45 | 7.77 | 8.07 | 5.73 | 5.66 |
| Total Debt to Equity (x) | 0.01 | 0.01 | 0.02 | 0.03 | 0.04 |
| Contingent Liabilities | 13.60 | 23.03 | 35.40 | 7.29 | 8.40 |

Income (P&L) | Balance Sheet | **Cash Flow** | Ratios — CONSOLIDATED

| ANNUAL | FY 2026 | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 |
|---|---|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 133.15 | 156.94 | 112.58 | 121.18 | 13.15 |
| Net Cash used in Investing Activities | -115.05 | -67.77 | -78.16 | -32.00 | 16.86 |
| Net Cash flow from Financing Activities | -23.77 | -69.79 | -20.87 | -66.62 | -21.19 |
| Net Cash Flow | -3.97 | 18.95 | 13.61 | 22.51 | 8.79 |
| Closing Cash & Cash Equivalent | 79.14 | 83.10 | 64.15 | 50.54 | 28.03 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | ↓ -4.77 | ↑ 29.55 | ↑ 26.93 | ↑ 80.32 | ↑ 45.67 |
| Total Debt/ CFO (x) | 0.05 | 0.05 | 0.12 | 0.19 | 2.21 |

Income (P&L) | Balance Sheet | Cash Flow | **Ratios** — CONSOLIDATED

| ANNUAL | FY 2026 | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 |
|---|---|---|---|---|---|
| Return on Equity (%) | 16.93 | 15.62 | 14.12 | 13.82 | 13.34 |
| Return on Capital Employed (%) | 22.65 | 20.98 | 18.33 | 17.39 | 17.21 |
| Return on Assets (%) | 15.19 | 14.15 | 12.71 | 11.96 | 11.48 |
| Interest Coverage Ratio (x) | 207.80 | 127.49 | 73.20 | 62.93 | 60.81 |
| Asset Turnover Ratio (x) | 0.83 | 0.87 | 0.88 | 0.90 | 0.80 |
| Price to Earnings (x) | 11.21 | 13.79 | 16.37 | 17.73 | 16.95 |
| Price to Book (x) | 1.90 | 2.15 | 2.31 | 2.45 | 2.26 |
| EV/EBITDA (x) | 7.15 | 8.53 | 10.21 | 11.50 | 10.93 |
| EBITDA Margin (%) | 29.96 | 26.33 | 23.74 | 20.17 | 22.24 |

## மேம்பட்ட விளக்கப்படம்:




## சகநிறுவன ஒப்பீடு:



Mayur Uniquoter Stock Performance | **Ratio Performance** | See All Parameters

| NAME | | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|---|
| Mayur Uniquoter | | 15.32 | 2.80 | 16.93 | 15.19 | 8.72 | 26.92 |
| Responsive Ind. | × | 40.19 | 2.61 | 9.52 | 8.00 | 12.24 | 12.95 |
| Nilkamal Ltd | × | 25.19 | 1.99 | 7.32 | 4.59 | 6.41 | 5.31 |
| Mold-Tek Packaging | × | 30.60 | 3.37 | 10.56 | 6.88 | 6.61 | 12.90 |
| All Time Plastics Ltd. | × | 38.17 | 2.13 | 5.77 | 4.51 | 11.51 | 11.08 |
| Zenith Exports | × | 379.78 | 1.31 | 2.72 | 2.33 | 1.18 | 6.07 |

Add More

# ஷேர்ஹோல்டிங் பேட்டர்ன்:

**QOQ Change** | Total Shareholdings




*Showing Mayur Uniquoter Shareholding as on Jun 2026*

| CATEGORY | JUN 2026 | MAR 2026 | DEC 2025 | SEP 2025 |
|---|---|---|---|---|
| Promoters | 58.77 | 58.77 | 58.59 | 58.59 |
| Pledge | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| FII | 4.78 | 3.68 | 3.23 | 3.30 |
| DII | 3.08 | 3.59 | 3.27 | 3.42 |
| Mutual Funds | 1.63 | 2.30 | 2.16 | 2.09 |
| Others | 33.36 | 33.95 | 34.91 | 34.69 |

QOQ Change | **Total Shareholdings**




*Showing Shareholding as on Jun 2026*

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 2,55,38,433 | 58.77 % | 0.00 |
| Pledge | 0 | 0.00 % | 0.00 |
| FII | 20,76,452 | 4.78 % | ↑ 1.10 |
| DII | 13,36,414 | 3.08 % | ↓ -0.51 |
| MF | 7,07,479 | 1.63 % | ↓ -0.66 |
| Others | 1,45,01,301 | 33.36 % | ↓ -0.59 |

# பரஸ்பர நிதியத்தின் உரிமை:

## MF Ownership

**ICICI Pru Dividend Yield Direct-G**
Equity: Thematic-Dividend Yield

| 32.84 | 0.48404848% | 0.00 |
|---|---|---|
| Amount Invested (in Cr.) | % of AUM | % Change (MoM basis) |

**Bandhan Transportation and Logistics Direct-G**
Equity: Sectoral-Auto & Transportation

| 7.24 | 0.98% | ↓ 22.90 |
|---|---|---|
| Amount Invested (in Cr.) | % of AUM | % Change (MoM basis) |

**Quantum Small Cap Direct-G**
Equity: Small Cap

| 5.82 | 2.29% | 0.00 |
|---|---|---|
| Amount Invested (in Cr.) | % of AUM | % Change (MoM basis) |

*MF Ownership as on 31 July 2026*

View all Mutual Fund Schemes »

## எமது ஆய்வு பார்வையில்(ஆய்வு ஆய்வாளரின்):

'மயூரி யூனிக்வோட்டர்ஸ்' (Mayur Uniquoters) நிறுவனம், செயற்கை தோல் (synthetic leather) மற்றும் பூச்சு பூசப்பட்ட துணி வகைகளை (coated textile fabrics) உற்பத்தி செய்து, வாகனத் துறை உற்பத்தியாளர்கள் (OEMs), காலணி, வீட்டு அலங்காரம் மற்றும் பிற துறைகளுக்கு வழங்கும் இந்தியாவின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும். இந்நிறுவனத்தின் நிதி மற்றும் அடிப்படைச் செயல்பாட்டு அளவீடுகள் (financial & fundamental parameters) மிகவும் வலுவாக உள்ளன. எனது ஆய்வின்படி, நடுத்தர காலம் (8 மாதங்கள் முதல் 1.5 ஆண்டுகள் வரை) மற்றும் நீண்ட கால (2 முதல் 3 ஆண்டுகள் வரை) முதலீட்டிற்கு இது ஏற்றதாகத் தோன்றுகிறது. நடுத்தர காலத்தில் இதன் பங்கு விலை 1160-க்கும் அதிகமாகவும், நீண்ட காலத்தில் 1500–க்கும் அதிகமாகவும் உயரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பங்குச் சந்தை தொடர்பான வர்த்தகம், முதலீடு, லாபப் பகிர்வு, முதலீட்டுத் தொகுப்பு குறித்த ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள்(அடிப்படை அம்சங்கள், தொழில்நுட்பப் பகுப்பாய்வு, உத்திகள்), தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும். நகரத்தார் கேபிடல் ( WhatsApp +91–9790755337 / +91–9150831973).

For Stocks Market Trade/Investment, Profit Sharing, Portfolio Advices and Training (Basics / Fundamentals, Technical, Strategies), Kindly reach NAGARATHAR KAPITAL ( WhatsApp +91–9790755337 / +91–9150831973).

சிறப்புப் பகுதி

## முதலீட்டாளர்களுக்கான பார்வை

### இந்த மாத சிறப்புக் கட்டுரை

**மீட்சி பெறும் பங்குகள்**



## மீட்சி பெறும் பங்குகள் (Turnaround Stocks) பங்குகளைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

**உண்மையான மீட்சி பெறும் பங்குகளை நாம் எவ்வாறு அடையாளம் காண்பது?**

நிதிச் செயல்திறன்,
லாப வரம்பு நிலைத்தன்மை,
செயல்பாட்டுப் பணப்புழக்கம்,
குறையும் கடன்,
நிர்வாகத்தின் நம்பகத்தன்மை,

சாதகமான தொழில் சூழல்கள் மற்றும் மீண்டும் மீண்டும் செயல்படுத்தக்கூடிய தன்மை.

ஆகியவற்றில் ஏற்படும் முன்னேற்றங்களைக் கவனிப்பதன் மூலம், உண்மையான மீட்சி பெறும் பங்குகளை நாம் அடையாளம் காண முடியும்.

அளவியல் வடிகட்டிகளைப் பண்பியல் நுண்ணறிவுகளுடன் இணைப்பது, கட்டமைப்பு மீட்சியைக் குறுகிய கால மீள் எழுச்சிகளிலிருந்து வேறுபடுத்தி அறிய உதவுகிறது.

## நிதிச் செயல்பாடு,

நிதிச் செயல்பாடு என்பது, ஒரு நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிலைத்தன்மை, லாபம் ஈட்டும் திறன் மற்றும் செயல்பாட்டுத் திறன் ஆகியவற்றை மதிப்பிடுவதற்காக, அதன் வருமான அறிக்கை, இருப்புநிலைக் குறிப்பு மற்றும் பணப்புழக்க அறிக்கை போன்ற நிதி அறிக்கைகளை ஆய்வு செய்யும் செயல்முறையாகும். இது நிர்வாகம், முதலீட்டாளர்கள் மற்றும் கடன் வழங்குநர்கள் ஆகியோர் ஒரு வணிகத்தின் போக்கை புரிந்துகொள்ளவும், தரவுகளின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கவும் உதவுகிறது.

**லாப வரம்பு நிலைத்தன்மை,**

பல்வேறு பொருளாதாரச் சுழற்சிகளில் ஒரு நிறுவனம் தனது லாப வரம்புகளை (மொத்த, செயல்பாட்டு அல்லது நிகர வரம்புகள் போன்றவை) சீராகப் பராமரிக்கும் திறனைக் குறிக்கிறது. இது ஒரு வணிகத்தின் மீள்திறன், அதன் விலை நிர்ணய சக்தி மற்றும் உற்பத்தி மற்றும் செயல்பாட்டுச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதில் அதன் நிர்வாகத்தின் செயல்திறன் ஆகியவற்றை எடுத்துக்காட்டுகிறது.

**லாப வரம்பு நிலைத்தன்மையை பின்வருவனவற்றின் மூலம் பகுப்பாய்வு செய்யலாம்:**

பல ஆண்டுப் போக்குப் பகுப்பாய்வு
ஒப்பீட்டுச் சந்தை ஒப்பீடு
செயல்பாட்டு நெம்புகோல் மதிப்பீடு
உள்ளீட்டுச் செலவு உணர்திறன்

**செயல்பாட்டுப் பணப்புழக்கம்,**

ஒரு நிறுவனம் அதன் முக்கிய வணிகச் செயல்பாடுகளிலிருந்து உருவாக்கும் உண்மையான பணத்தை இது அளவிடுகிறது. பங்குப் பகுப்பாய்வில் இது மிகவும் முக்கியமானது, ஏனெனில் இது (தேய்மானம் போன்ற) கணக்கியல் சரிசெய்தல்களை நீக்கி, ஒரு நிறுவனத்தின் அன்றாட வணிகம் உண்மையாகவே தன்னிறைவு பெற்றதா அல்லது உள்ளார்ந்த நிதி நெருக்கடியை மறைக்கிறதா என்பதை வெளிப்படுத்துகிறது.

கையிருப்பில் உள்ள உபரிப் பணம் (F C F ) கணக்கிடுதல்: செயல்பாட்டுப் பணப்புழக்கம் (O C F ) என்பது, உபரிப் பணப் புழக்கத்திற்கான (FCF) ஒரு முக்கியத் தொடக்கப் புள்ளியாகும். இது FCF = செயல்பாட்டுப் பணப்புழக்கம் (OCF) – மூலதனச் செலவுகள் (CapEx) எனக் கணக்கிடப்படுகிறது.

## குறைந்துவரும் கடன் நிலை,

பொதுவாக ஒரு பங்கிற்கு வலுவான, ஏற்றத்திற்கான சமிக்ஞையாகச் செயல்படுகிறது. இது மேம்பட்ட இருப்புநிலைக் குறிப்பின் ஆரோக்கியம், குறைந்த திவால் அபாயம் மற்றும் குறைக்கப்பட்ட வட்டிச் செலவுகள் ஆகியவற்றைக் குறிக்கிறது. இவை ஒரு நிறுவனத்தின் தடையற்ற பணப்புழக்கத்தை உடனடியாக அதிகரிக்கின்றன.

## நிர்வாக நம்பகத்தன்மை என்பது,

ஒரு நிறுவனத்தின் தலைமைத்துவத்தின் நம்பகத்தன்மையாகும். கடந்தகால வழிகாட்டுதல்களை உண்மையான செயல்திறனுடன் ஒப்பிடுவதன் மூலம் இது மதிப்பிடப்படுகிறது. உயர் நம்பகத்தன்மை கொண்ட குழுக்கள், இலக்குகளைத் தொடர்ந்து அடைகின்றன, வெளிப்படையான அறிக்கைகளை வழங்குகின்றன, மேலும் பங்கு உரிமையின் மூலம் பங்குதாரர்களின் நலன்களுடன் தங்கள் நலன்களை ஒருங்கிணைக்கின்றன.

## தொழில் துறை சாதகக் காரணிகள்,

பங்குப் பகுப்பாய்வில் தொழில் துறை சாதகக் காரணிகள் என்பவை, ஒரு துறையின் வளர்ச்சியை இயல்பாகத் தூண்டி, நிறுவன இலாபங்களை அதிகரிக்கும் பேரியல் பொருளாதாரம், தொழில்நுட்பம் அல்லது ஒழுங்குமுறை சார்ந்த காரணிகளாகும். இந்தச் சாதகக் காரணிகளைக் கண்டறிவது, முதலீட்டாளர்கள் அதிக வளர்ச்சி கொண்ட துறைகளை முன்கூட்டியே கண்டறியவும், ஒரு பங்கின் சாத்தியமான வருவாய், அமைப்பு ரீதியான, நீண்ட கால உத்வேகத்தால் ஆதரிக்கப்படுகிறதா என்பதை மதிப்பிடவும் உதவுகிறது.

## தொழில் துறை சாதகக் காரணிகளின் முக்கிய வகைகள்

தொழில்நுட்ப இடையூறுகள்

ஒழுங்குமுறை மற்றும் சட்டரீதியான ஆதரவு

அளிப்பு மற்றும் தேவை சமநிலையின்மைகள்

## மீண்டும் மீண்டும் செயல்படுத்தக்கூடிய செயல்முறை.

மீண்டு வரும் பங்குகளைப் பொறுத்தவரை, செயல்பாட்டு அல்லது நிதி நெருக்கடியிலிருந்து மீண்டு வரும் நிறுவனங்களைக் கண்டறிந்து, மதிப்பீடு செய்து, அவற்றிலிருந்து லாபம் ஈட்டுவதற்கான ஒரு முறையான, படிப்படியான கட்டமைப்பை உருவாக்குவது அவசியமாகும். பரந்த சந்தை ஒரு பங்கின் மதிப்பை மறுமதிப்பீடு செய்வதற்கு முன்பே, அதன் ஆரம்பகால மீட்சி அறிகுறிகளை அடையாளம் காண, கடுமையான தரவு சார்ந்த அளவுகோல்களைப் பயன்படுத்துவதன் மூலம், இந்தச் செயல்முறையிலிருந்து உணர்ச்சிகளை நீக்குவது அவசியமாகும்.




## மீட்சிபெறும் பங்குகள் என்றால் என்ன?

இவை, பலவீனமான நிதிச் செயல்திறன் காலகட்டத்தைக் கடந்து, பங்கு விலைகள் கடுமையாக வீழ்ச்சியடைந்த நிறுவனங்களின் பங்குகள் ஆகும். பலவீனமான செயல்திறனுக்கு வழிவகுக்கும் சிக்கல்களைக் கண்டறிந்து, மீண்டும் லாபம் ஈட்டுவதற்காகத் தங்கள் வணிக உத்தியை மாற்றிக்கொள்ள வாய்ப்புள்ள நிறுவனங்களைக் கண்டறிவதே இதன் நோக்கமாகும்.

**ஒரு மீட்சிபெறும் பங்கு பொதுவாக பின்வரும் நிலைகளிலிருந்து ஒரு மாற்றத்தைக் காட்டுகிறது:**

பலவீனமான அல்லது எதிர்மறை வருமானம் → மேம்படும் லாபம்

அதிக அல்லது அதிகரித்து வரும் கடன் → நிலைபெறும் இருப்புநிலைக் குறிப்பு

குறைந்து வரும் வருவாய் → மீண்டும் அதிகரிக்கும் தேவை வளர்ச்சி

எதிர்மறை பணப்புழக்கம் → மேம்படும் பண உருவாக்கம்

சுருக்கமாக, ஒரு மீட்சி என்பது ஒரு காலாண்டு மீட்சியை மட்டும் கொண்டதல்ல, மாறாக நீடித்த செயல்திறன் மேம்பாட்டை உள்ளடக்கியது.

**மீட்சிபெறும் பங்குகளின் (Turnaround Stocks) பண்புகள்:**

நிர்வாக மாற்றங்கள்

வணிக உத்தி

பணப்புழக்க மேலாண்மை

பங்கு மதிப்பீடுகள்

**நிர்வாக மாற்றங்கள்:**

ஒரு பங்கு மற்றவற்றை விடச் சிறப்பாகச் செயல்படுவதற்கான சாத்தியக்கூறு, அந்த நிறுவனம் லாபம் ஈட்டும் திறனைப் பொறுத்தே அமைகிறது.

இதன் விளைவாக, அத்தகைய பங்குகளுக்குரிய முக்கிய பண்புகளில் ஒன்று, அந்த நிறுவனம் தனது தவறுகளை ஒப்புக் கொண்டு மாற்றங்களைச் செய்யத் தயாராக இருப்பதாகும். வழக்கமாக, இதில் நிர்வாகக் கட்டமைப்பு மாற்றம் அடங்கியிருக்கும்.

ஏனெனில், கடந்தகால உத்திகளில் உள்ள குறைபாடுகளை ஒரு புதிய நிர்வாகி ஏற்றுக்கொள்வது எளிதானது.

**வணிக உத்தி:**

வெளிப்புறச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள், ஒரு குறிப்பிட்ட துறையைச் சேர்ந்த நிறுவனங்களின் வளர்ச்சிக்குச் சாதகமாக அமையக்கூடும்.

உதாரணமாக:
ரூபாயின் மதிப்பு சரிந்தது, இறக்குமதியை அதிகம் சார்ந்திருந்த நிறுவனங்களைப் பாதித்தது. ரூபாயின் மதிப்பு நிலையாக இருக்கும் போது, அந்நிறுவனங்கள் தங்கள் செலவுகளை முன்பை விடச் சிறப்பாக நிர்வகிக்கும் நிலையை எட்டும். அதிக பணவீக்கமும் உள்ளீட்டுச் செலவுகளைப் (input costs) பாதிக்கிறது.

உள்ளீட்டுச் செலவுகள் அதிகரிப்பு மற்றும் ரூபாயின் மதிப்பு சரிவு ஆகியவற்றால் நஷ்டத்தைச் சந்தித்த நிறுவனங்களைக் கண்டறிவது ஒரு நல்ல நடவடிக்கையாக இருக்கும்.

நிறுவனங்கள் தங்கள் காலாண்டு நிதிநிலை அறிக்கைகளில், தங்கள் செயல்பாட்டைப் பாதிக்கும் காரணிகள் குறித்துக் குறிப்பிடுகின்றன.

அத்துடன், லாபம் ஈட்டும் நிலையை அடைவதற்கான தங்கள் உத்திகளையும் அந்த அறிக்கைகளில் அவை விவரிக்கின்றன.

**பணப்புழக்கத்தை நிர்வகித்தல்:**

புதிய நிர்வாகம் நிறுவனத்தின் சிக்கல்களைக் கண்டறிந்து, ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் செயல்படுத்தக்கூடிய தெளிவான வணிக உத்தியை வகுக்கிறது.

இந்த உத்தியின் முக்கிய நோக்கங்களில் ஒன்று பணப்புழக்கத்தை நிர்வகிப்பதாகும்; அதாவது செயல்பாட்டுச் செலவுகள் மற்றும் வருவாய்க்கு இடையிலான நிகர நிலையைச் சீரமைப்பதாகும். சொத்துகள் அல்லது குறிப்பிட்ட பிரிவுகள் போன்ற, நிறுவனத்தின் முக்கிய வணிகத்திற்கு அவசியமற்றவற்றை விற்பனை செய்தல் மற்றும் செலவுகளைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் இது மேற்கொள்ளப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, ஊக்கத்தொகைகள் வழங்குவதாக உறுதியளிப்பதன் மூலம் விற்பனையைத் தீவிரப்படுத்தி வருவாயை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் பண வரவை, நிறுவனத்தின் செலவுகளை ஈடுகட்ட மீண்டும் முதலீடு செய்ய முடியும்.

### பங்கு மதிப்பீடுகள்:

மீட்சி காணும் நிலையில் உள்ள பங்குகளின் (turnaround stocks) மதிப்பீடு பெரும்பாலும் குறைவாகவே இருக்கும்; அதாவது, இவற்றின் PE (விலை–வருவாய்) மற்றும் PB (விலை–புத்தக மதிப்பு) விகிதங்கள் குறைவாக இருக்கும். PE விகிதம் என்பது ஒரு ரூபாய் வருவாய்க்கு முதலீட்டாளர்கள் எவ்வளவு பணம் செலுத்துகிறார்கள் என்பதைக் குறிக்கிறது; அதேவேளையில், PB விகிதம் என்பது நிறுவனத்தின் சொத்துக்களின் (பிராண்ட் மதிப்பு மற்றும் நற்பெயர் தவிர்த்து) ஒவ்வொரு ரூபாய்க்கும் முதலீட்டாளர்கள் செலுத்தும் தொகையைக் குறிக்கிறது. சந்தையில் அந்த நிறுவனமும், அதன் விளைவாக அதன் பங்கும் குறைத்து மதிப்பிடப்படுவதே இதற்குக் காரணமாகும். இருப்பினும், சில சமயங்களில் வருவாய் மிகக் குறைவாக இருந்தால் PE விகிதங்கள் அதிகமாகவும், நிறுவனத்தின் பொறுப்புகள் அல்லது கடன் அதன் சொத்துக்களை விட அதிகமாக இருந்தால் P B விகிதங்கள் எதிர்மறையாகவும் (negative) இருக்கக்கூடும்.

## குறிப்பிட்ட ஆய்வு நிகழ்வுகள்



### 1, பாரத ஸ்டேட் வங்கி (SBI)

பின்னணி: 2010–களின் பிற்பகுதியில், SBI அதிகரித்து வரும் வாராக்கடன்கள் (NPAs) மற்றும் ஒதுக்கீட்டுச் சுமைகளை எதிர் கொண்டது.

மீட்சிக்கான குறிகாட்டிகள்:

நெருக்கடிக்குள்ளான சொத்துக்களில் படிப்படியான குறைப்பு (மொத்த வாராக்கடன் விகிதம் மேம்பட்டது)

மேம்பட்ட நிகர இலாப வளர்ச்சி

நெகிழ்வான CASA வைப்புத்தொகை விகிதம்

காலப்போக்கில் சிறந்த கடன் செலவுகள்

சந்தையின் எதிர்வினை: செயல்திறன் தரம் மேம்பட்டதால் PE பெருக்கங்கள் விரிவடைந்தன.

இது ஏன் முக்கியம்: ஒரு பெரிய சில்லறை வாடிக்கையாளர் தளத்தைக் கொண்ட ஒரு பாரம்பரிய வங்கி, சொத்துத் தர மேம்பாடு எவ்வாறு மறுமதிப்பீட்டிற்கு அடித்தளமாக அமையும் என்பதை நிரூபித்தது.

## 2, JSW Energy

பின்னணி: தேவைக்கும் விநியோகத்திற்கும் இடையிலான ஏற்றத்தாழ்வுகள் மற்றும் நிலையான செலவு அழுத்தங்களை எதிர்கொண்ட ஒரு மின் உற்பத்தி நிறுவனம்.

மீட்சிக்கு வழிவகுத்த காரணிகள்:

நீண்ட கால மின் கொள்முதல் ஒப்பந்தங்களை (PPAs) மறுசீரமைத்தல்

முக்கியச் சந்தைகளில் மின் பயன்பாடு அல்லது கொள்முதல் அளவை (capacity off–take) அதிகரித்தல்

சொத்துக்களைப் பணமாக்குதல் மூலம் கடன் சுமையைக் குறைத்தல்

சந்தையின் எதிர்வினை: வளர்ச்சிக் கண்ணோட்டம் மேம்பட்டதால் நிறுவனத்தின் மதிப்பீடு உயர்ந்தது.

## 3, பாரத் ஃபோர்ஜ்

பின்னணி: உலகளாவிய வாகனத் தேவையில் ஏற்பட்ட சுழற்சி சார்ந்த சரிவுகளால் பாதிக்கப்பட்ட ஒரு முக்கிய வாகன உதிரிபாக ஏற்றுமதியாளர்.

மீட்சிக்கான குறிகாட்டிகள்:

வாகனம் அல்லாத பிரிவுகளில் (எண்ணெய் மற்றும் எரிவாயு, விண்வெளி) விரிவாக்கம்

ஆர்டர் புத்தகத்தின் பன்முகத்தன்மையில் முன்னேற்றம்

அதிக மதிப்புள்ள தயாரிப்புகளிலிருந்து சிறந்த லாப வரம்புகள்

சந்தையின் எதிர்வினை: வருவாயின் தரம் மேம்பட்டதால், படிப்படியான மறுமதிப்பீடு.

## தவிர்க்க வேண்டியவை (பொதுவான தவறுகள்)

சில்லறை முதலீட்டாளர்கள் பின்வருவனவற்றிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும்:

மேம்பட்ட காலாண்டு இலாபங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு முடிவுகளை எடுப்பது

இலாப வளர்ச்சி இருந்தபோதிலும், பலவீனமான பணப்புழக்கத்தைப் புறக்கணிப்பது

ஷார்ட்–ஸ்க்வீஸ் ஏற்றங்களைத் துரத்துவது

அதிக கடன் சுமை கொண்ட நிறுவனங்களில் அதிக முதலீடு செய்வது

எல்லா மீட்சி அறிகுறிகளும் நீடித்திருப்பதில்லை. அளவுசார் மற்றும் பண்புசார் வடிகட்டிகளை இணைப்பது அவசியம்.

## முக்கியக் குறிப்புகள்

மீட்சி பெறும் பங்குகளுக்கு, தற்காலிக முடிவுகள் அல்ல, நீடித்த மேம்பாடுகள் தேவைப்படுகின்றன.

பணப்புழக்கம், கடன் குறைப்பு, லாப வரம்பு விரிவாக்கம் மற்றும் வருவாய் வளர்ச்சி ஆகியவை முக்கியக் குறிகாட்டிகளாகும்.

நிர்வாகத்தின் நம்பகத்தன்மையும், செயல்படுத்தும் ஒழுக்கமும் இன்றியமையாதவை.

தொழில்துறைச் சுழற்சியும், போட்டி நிலைப்பாடும் நிலைத்தன்மையை உறுதிப்படுத்த உதவுகின்றன.

நிறுவனங்களின் பங்களிப்பும், மதிப்பீட்டுத் தள்ளுபடி முறைகளும் மறுமதிப்பீட்டிற்கான ஆரம்பக் குறிப்புகளை வழங்கக்கூடும்.

பங்குச் சந்தை தொடர்பான வர்த்தகம், முதலீடு, லாபப் பகிர்வு, முதலீட்டுத் தொகுப்பு குறித்த ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள்(அடிப்படை அம்சங்கள், தொழில்நுட்பப் பகுப்பாய்வு, உத்திகள்), தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும். நகரத்தார் கேபிடல் ( WhatsApp +91-9790755337 / +91-9150831973).

For Stocks Market Trade/Investment, Profit Sharing, Portfolio Advices and Training (Basics / Fundamentals, Technical, Strategies), Kindly reach NAGARATHAR KAPITAL ( WhatsApp +91-9790755337 / +91-9150831973).

## இந்த இதழில் எமது ஆய்வு பார்வையில்

## குறுகிய கால பங்குகள்:

க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

1, **HDFC Life Insurance Company Ltd NSE: HDFCLIFE...**
**CMP - 530 ₹ Entry 540 ₹ to 550 ₹ Add more around Till 500 ₹**
**Target 600 ₹ and 650 ₹**

2, **Jio Financial Services Ltd NSE: JIOFIN...**
**CMP - 233 ₹ Entry 235₹ to 240 ₹ Add more on down Till 200 ₹**
**Target 270 ₹ and 300 ₹**

3, **Oil and Natural Gas Corporation Ltd**
**NSE: ONGC... CMP - 236 ₹ Entry 220 ₹. to 230 ₹**
**Add more on down. Till 180 ₹ Target 260 ₹ and 290 ₹**

4, **ITC Ltd NSE: ITC...**
**CMP - 264 ₹ Entry 260 ₹ to 265 ₹ Add more on down Till 220 ₹**
**Target 300 ₹ and 330 ₹**

5, **Bharat Electronics Ltd NSE: BEL...**
**CMP - 406 ₹ Entry 400 ₹ to 410 ₹ Add more on down Till 360 ₹**
**Target 440 ₹ and 480 ₹**

6, **Power Grid Corporation of India Ltd NSE: POWERGRID...**
**CMP - 264 ₹ Entry 250 ₹ to 260 ₹ Add more on down Till 200 ₹.**
**Target 290 ₹ and 320 ₹**

7, **Tata Motors Passenger Vhcls Ltd NSE: TMPV...**
**CMP - 302 ₹ Entry 300 ₹ to 310 ₹ Add more on down Till 260 ₹.**
**Target 370 ₹ and 370 ₹**

8, **Coal India Limited NSE: COALINDIA...**
**CMP - 418 ₹ Entry 400 ₹ to 410 ₹ Add more on down Till 369 ₹.**
**Target 450 ₹ and 490 ₹**

9, **HDFC Bank Ltd NSE: HDFCBANK...**
**CMP - 704 ₹ Entry 700 ₹ to 710 ₹ Add more on down Till 640 ₹.**
**Target 770 ₹ and 850 ₹**

10, **Wipro Ltd NSE: WIPRO...**
**CMP - 171 ₹ Entry 170 ₹ to 175 ₹ Add more on down Till 140 ₹.**
**Target 200 ₹ and 230 ₹**

பங்குச் சந்தை தொடர்பான வர்த்தகம், முதலீடு, லாபப் பகிர்வு, முதலீட்டுத் தொகுப்பு குறித்த ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள்(அடிப்படை அம்சங்கள், தொழில்நுட்பப் பகுப்பாய்வு, உத்திகள்), தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும். நகரத்தார் கேபிடல் ( WhatsApp +91–9790755337 / +91–9150831973).

For Stocks Market Trade/Investment, Profit Sharing, Portfolio Advices and Training (Basics / Fundamentals, Technical, Strategies), Kindly reach NAGARATHAR KAPITAL ( WhatsApp +91–9790755337 / +91–9150831973).

## பொறுப்புத் துறப்பு

இந்தக் கட்டுரையின் ஆசிரியர்கள் SEBI–யில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர்கள் (Research Analysts) அல்லர். இங்கு பகிரப்படும் வரைபடங்கள் (Charts), விலை நிலைகள் (Levels), பங்குகள் (Stocks) மற்றும் கருத்துகள் அனைத்தும் ஆசிரியர்களின் தனிப்பட்ட ஆய்வு மற்றும் பார்வையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

இத்தகவல்கள் ஆய்வுத் தகவல்களைப் பகிர்வதற்காக மட்டுமே; பங்குகளை வாங்கவோ, விற்கவோ அல்லது எந்தவொரு வர்த்தக நடவடிக்கையிலும் ஈடுபடவோ இது பரிந்துரையாகவோ அல்லது முதலீட்டு ஆலோசனையாகவோ கருதப்படக் கூடாது.

இத்தகவல்களின் அடிப்படையில் ஒருவர் மேற்கொள்ளும் எந்தவொரு முதலீடு அல்லது வர்த்தக முடிவும் அவரவர் சொந்த முடிவும் பொறுப்பும் ஆகும். அதன் மூலம் ஏற்படும் லாபம் அல்லது இழப்புகளுக்கு கட்டுரையாளர்களோ, 'நாம் நகரத்தார்' மின்னிதழோ பொறுப்பேற்காது. இது தொடர்பாக எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

முதலீட்டு முடிவுகளை எடுக்கும் முன், வாசகர்கள் தங்களது சொந்த ஆய்வை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

# ஜாதகத்தில் மறைந்திருக்கும் பூர்வ புண்ணிய ரகசியம்

-ஜோதிடர் எல்லி
9894176494

பகுதி – 2

நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்களுக்கு வணக்கம்!

சென்ற இதழில் பூர்வ புண்ணிய ஸ்தானம் பற்றிய தகவல்களை பகிர்ந்து கொண்டேன்!

அதன் தொடர்ச்சியாக மேலும் பல விசயங்களை பற்றி இந்த கட்டுரையில் பார்ப்போம்!



புத்தி பூர்வ புண்ணிய ஸ்தானமான ஐந்தாமிடம் உணர்த்துவது முக்கியமாக மூன்று யோகங்களை ஆகும் அவைகள் க

1) ஆழ்மனதில் உள்ள உள்ளுணர்வு, கலை,திறமை,காதல், குறிக்கோள்கள்

2)பூர்வீகச் சொத்துகள், முன்னோர்கள் பற்றிய செய்திகள்,

3) குழந்தைகள், குழந்தைகள் மூலமாக கிடைக்கும் பலன்கள், தாத்தா மற்றும் பேரக்குழந்தைகள் பற்றிய குறிப்புகள்.

ஐந்தில் எந்தெந்த கிரகங்கள் நிற்பது யோகம் எந்த கிரகங்கள் அமர்வது சிறப்பல்ல என்பதை ஏற்கெனவே அறிந்து கொண்டோம்.

இனி ஒவ்வொரு லக்னத்திற்கும் ஐந்தில் நிற்கும் கிரகங்கள் தரும் பலன்களை பற்றி தெரிந்து கொள்வோம்.

### மேஷ லக்னம்:

#### சூரியன்;

தொந்தரவு இருக்கும், அடி வயிற்றில் அவ்வப்போது பிரச்சினை வரலாம்.ஜாதகருக்கு ஒரு ஆண் குழந்தை க்கு மட்டுமே வாய்ப்பு ஏற்படும். உள்ளூரில் மரியாதை கௌரவம் உண்டு இது ஜாதகரின் பரம்பரையில் இருந்து வந்து இருக்கலாம். நிறைய நீர் அருந்துதல் பழச்சாறு எடுத்து கொள்வது நல்லது.

#### சந்திரன்;

ஜாதகருக்கு பெண் குழந்தைகள் அதிகமாக இருக்கும்!
தாய் மீது அதிக எதிர்பார்ப்பு இருக்கும் இதன் காரணமாக தாயார் மீது கோபம் எரிச்சல் உண்டாகலாம்.

#### செவ்வாய்;

கார உணவுகளை விரும்பி சாப்பிடுவார் இதனால் வயிற்றில் பிரச்சினை வரவும் வாய்ப்பு உண்டு.

சில காலங்கள் குடும்பம் உறவுகளை விட்டு தொலைவில் வசிக்க வேண்டிய சூழல் ஏற்படும்.

ஆண் குழந்தைக்கு வாய்ப்பு உள்ளது ஆனால் அறுவை சிகிச்சை மூலமாக பிறக்க நேரிடும்.

சாம, தான, பேத, தண்டம் என்னும் நான்கு உபாயங்களில் ஜாதகர் நான்காவது வழிமுறையையே கையில் எடுக்கும் மனோபாவம் கொண்டவராக இருப்பார்.

**புதன்;**

முன்பின் அறிமுகம் இல்லாத ஆட்களிடமும் பேசி வசீகரிக்கும் ஆற்றல் மிக்கவராக ஜாதகர் இருப்பார்.

தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் ஈடுபாடு உண்டு அதன் மூலம் வேலை வாய்ப்பு கிடைக்கும். தாய்வழி உறவினர்களுடன் அதிகம் நெருக்கமாக இருக்க விரும்புவார்.அதிபுத்திசாலித்தனம் இருந்தாலும் அதுவே சமயத்தில் சறுக்கி விடவும் வாய்ப்பு உண்டு.

அதீத பேச்சு மூலமாக நிறைய நண்பர்களை பகைத்து கொள்வார்கள். அசட்டுத்தனம் நிறைந்த துடுக்கு பேச்சு பல இடங்களில் ஜாதகருக்கு சிக்கல்களை ஏற்படுத்தும்.

**வியாழன்;**

குழந்தை பிறப்பு தாமதம் ஆகும்.
ஆனாலும் சுறுசுறுப்பு, புத்தி சாதுர்யம், பல்துறை வித்யா திறன் கொண்ட புத்திரபாக்கியம் உருவாகும். ஜாதகருக்கு இறை நம்பிக்கை, கோயில் திருப்பணிகள் மீது ஆர்வம் உருவாகும். தந்தையார் அன்பு ஜாதகருக்கு கிடைக்கும்.

குழந்தைகளுக்காக அதிக செலவுகள் செய்வார் சுப விரயங்கள் எப்போதும் வந்து போகும்.

**சுக்கிரன்;**

ஜாதகரின் பூர்வீகத்தில் இரண்டு தாரம் இருக்கும்.தாத்தா அல்லது தந்தை வழியில் இருக்கலாம்.

ஜாதகர் கலை ஆர்வம் கொண்டவராக காணப்படுவார்.

வாழ்க்கைத்துணை பூர்வீகத்தில் அல்லது தெரிந்த இடத்தில் இருந்து வரும். மனைவி மீது அதிக நெருக்கம் அன்பு மிகுதியாக இருக்கும். இல்லற பந்தத்தில் சிறு சிறு பிரச்சனைகள் வந்து போகும். பணம் சம்பாதிப்பதில் ஆர்வம் கொண்டவராக இருப்பார்.

**சனி;**

குழந்தைகளுக்காக கொஞ்சக் காலம் பொறுமை காக்க வேண்டும். திருமணம் கூட சற்று தாமதமாக வாய்ப்பு உள்ளது.இந்த அமைப்பில் குரு பார்வை செய்வதால் நற்பலன்களை எதிர்ப்பார்க்கலாம். மூத்த சகோதரர் மூலம் ஆதாயங்கள் கிடைக்காது.

**ராகு;**

ஜாதகர் பேராசை பிடித்தவர்.
அதிக எதிர்பார்ப்புகள் உள்ளவராக இருப்பார்.அனைத்திற்கும் ஆசைபடுபவராக இருக்கலாம் அதனால் கடுமையான முயற்சிகள் எப்போதும் செய்து கொண்டே இருப்பார்.

பூர்வீகத்தில் ஆதரவு இருக்காது , ராகு உடன் இதர கிரகங்கள் கூட்டாக இருந்தால் பலன்கள் மாறுபடும் அந்த இணைவில் குரு பகவான் இடம் பெற்றால் நற்பலன்களும் மிகுதியாக வந்து சேரும்.

**கேது;**

ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். மெய்யியல் தேடல் உண்டாகும். தந்தையாரின் முழு ஆதரவையும் அவர் மூலமாக கிடைக்க வேண்டிய நற்பலன்களும் பாதிக்கப்படும்.

ஒன்றிற்கு மேற்பட்ட கிரகங்கள் நிற்கும் போது அவை லக்ன அசுபரா சுபரா என்று அறிந்த பிறகு பலன்கள் சொல்ல முடியும்.

**சனி ராகு**
**சனி செவ்வாய்**

இது போன்ற இயற்கை அசுப கிரகங்கள் ஐந்தில் நிற்கும் போது பலன்களில் நிறைய வித்தியாசம் இருக்கும்.

**சனி செவ்வாய்;**

இரண்டும் பகை கிரகங்கள் ஆகும்.ஆகவே கிரக யுத்தம் செய்யும் நிலையில் இருப்பதால் பூர்வீக வீடு பூர்வீகத்தை நம்பி குடியிருக்கும் போது, சிக்கல்கள் உண்டாகும். இரண்டு கிரகங்களில் ஒன்று நீசம் பெற்று இருந்தாலும் நற்பலன்களை எதிர்பார்க்க இயலாது.

**சனி ராகு ஐந்தில் ;**

இங்கே ராகு தான் வலிமை பெறுகிறார்.ராகு தான் நின்ற வீட்டின் பலனையும் செய்வார் எனவே ஒரு வகையில் சில குறைகள் இருந்தாலும், ஐந்தாம் வீட்டு பலன்கள் ஜாதகருக்கு கிடைத்து விடும்

பொதுவாக கூட்டு கிரகங்கள் இருக்கும் போது அதில் ஆட்சி உச்சம் பெற்ற கிரகம் இருப்பது ஸ்தான வலுவினை அளிக்கும்.

பரிவர்த்தனை பெற்று கிரகங்கள் இருக்கும் போது எவ்வளவு தோஷங்கள் இருந்தாலும் நீங்கிவிடும்.

அடுத்த இதழில் ரிசப லக்னம் பற்றி பார்க்கலாம்

இராமநாதபுரத்தில் வசிக்கும் ஜோதிடர் எல்லி சட்டம் பயின்றவர். ஜோதிடம், தத்துவம் மற்றும் வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் கொண்ட இவர் ஜோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர்
தொடர்புக்கு : 9894176494



# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

# 97917 76534

www.naamnagarathar.com